**Book 3**

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்



"இறைவன் மட்டும் தனித்தவராக நினைவுகூறப்பட்டால் மறுமையை நம்பாதவர்களின் உள்ளங்கள் சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்களும் சேர்த்து நினைவு கூறப்பட்டால் அவர்கள் திருப்தி அடைந்துவிடுகிறார்கள்." (39:45)

நவம்பர்
1999
NOVEMBER

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# கண்ணியம் இறைவனுக்கே!

இந்த இதழில் இறைவனைக் குறிப்பிடும் எல்லா இடங்களிலும்' அவன்' என்ற சொல்லுக்கு பதிலாக' அவர்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

'அவன்', 'அவர்', என்ற இரண்டு சொற்களும் ஒருமையாக இருப்பினும் கண்ணியமானவர்களை, உதாரணமாக நபிமார்களை மகான்களை, ஆசிரியர்களை, தந்தையை, மற்றும் மரியாதைக் குரிய அனைவரையும் குறிப்பதற்கு 'அவர்' என்ற சொல்லையே நாம் பயன்படுத்துகிறோம்.

ஆனால் எல்லா வல்லமையும், கண்ணியமும் மிக்க இறைவனைக் குறிப்பிடும்போது கண்ணியமற்றவர்களைக் குறிப்பிடும்' அவன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம்.'

'அவன்' என்ற சொல் மட்டுமே ஒருமையைக் குறிக்கும் என்று வாதிடுபவர்கள் மேலே கூறப்பட்ட மரியாதைக் குரியவர்களை' அவன்' என்ற சொல்லால் அழைப்பார்களா?

நம் இஸ்லாமிய புத்தகங்களில் ஷைத்தான்களை, வழிகேடர்களை மற்றும் கண்ணியக் குறைவானவர்களைக் குறிப்பிட 'அவன்' என்ற சொல்லையே உபயோகப்படுத்துகிறோம். இத்தகைய சொல்லால் கண்ணியம் மிகுந்த இறைவனை அழைக்கலாமா?

"அறிந்து கொள்க! கண்ணியம் எல்லாம் அல்லாஹ்வுக்கு உரியது." (35:10) என்ற வசனத்தின் அடிப்படையில்' அவன்', என்று குறிப்பதை விட' அவர்' என்று குறிப்பது சிறந்தது, கண்ணியமிக்கது.

குறிப்பு: குர்ஆன் வசனங்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டே நமது இதழில் அனைத்து ஆக்கங்களும் அமையும். வாசகர்கள் இதில் குறிப்பிட்டிருக்கும் வசனங்களை, தங்களிடமுள்ள எந்த ஒரு குர்ஆன் மொழிபெயர்ப்பிலும் ஒத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

நவம்பர் 1999
நினைவு 3

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்

C.S. ரஃபியுதீன்

துணை ஆசிரியர்கள்:

N.A. அஹமது ஹுஸேன்

K. முஹமது ஷரீப் மஜாஹிரி

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

சமூக அங்கீகாரமா
இறைவனின் திருப்தியா?

இறைவனின் முத்திரை-19.
மெய்ப்பிக்கும் தூதர்

இறைதூதர்கள்-நபிமார்கள்
ஓர் ஆய்வு

குர்ஆன் மொழிபெயர்ப்பு

சரியான ஷஹாதத்

ஹதீஸ்களின் உண்மை நிலை

சாத்தான் மாபெரும்
மனோவசியக்கரன்

குர்ஆன் மட்டும் போதாதா?
(முபீன் கேள்விகளுக்கு-பதில்கள்).

# தலையங்கம்

## சமூக அங்கிகாரமா - இறைவனின் திருப்தியா?

நம்பிக்கை கொண்டவர்களே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் மேலும் சரியான சொல்லையே சொல்லுங்கள். (33 : 70)

மனிதர்கள் பெரும்பாலானோர் தத்தம் சுயநலன்களுக்காகவும், பிறரை மிகைத்து வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும், பதவி, பணம், அதிகாரம் ஆகியவற்றின் மேல் உள்ள ஆசையினாலும் மனிதர்களிடயே வரம்பு மீறகூடியவர்களாகவும், அக்கிரமம், அநியாயம் செய்யக் கூடியவர்களாகவும் உள்ளனர். எனவே இத்தகைய அநீதங் களையும், அத்துமீறல்களையும் தடுத்து அவர் களிடையே நீதியைநிலவச்செய்ய இறைவன் நபிமார்களையும்,தூதர்களையும்,தேர்ந்தெடுத்து அவர் களுக்கு வேதங்களையும்,செய்திகளையும் கொடுத்தனுப்பினார்.

அவ்வேதங்களில் இறுதியாக வந்த அல்குர்ஆனில் மேற்குறிப்பிட்ட ஒழுங்கீனங்ளை சீர் செய்ய சட்டதிட்டங்களையும், விதிகளையும் ஒழுங்கு முறை களையும் கூறியிருக்கிறார்.

பொதுவாக மனிதர்கள் தவறு செய்யக் கூடிய இயல்புள்ள வர்களாகவே இருக்கின்றார்கள். இருப்பினும் தண்டனைக்கு அஞ்சக்கூடியவர்களாகவும்ளனர். ஒரு மாணவன் தன் ஆசிரியரின் தண்டனைக்கு அஞ்சுகிறான். ஒரு மகன் தன் தந்தையின் தண்டனைக்கு அஞ்சுகிறான். குடிமக்கள், அரசின் தண்டனையான சிறைவைப்பு, அபராதம் போன்றவற்றுக்கு அஞ்சுகிறார்கள்.

இத்தகைய தண்டனைகளுக்கு அஞ்சித்தான் பொதுவாக மனிதர்கள் தவறு செய்யமால் இருக்கிறார்கள். எல்லா மனிதர்களும் தாங்கள் தவறு செய்தாலோ, குற்றங்கள் செய்தாலோ சமூகம், நீதிமன்றம், அரசாங்கம், அதிகாரிகள் ஆகியோரால் தண்டிக்கப்படுவோம் என்பதை நன்கு அறிந்தே இருக்கின்றனர். எனவே தவறுகளிலிருந்து தவிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றனர்.

நம்மைப் படைத்த இறைவன், தன் தண்டனைக்கு,கொடிய வேதனைக்கு அஞ்சிக்கொள்ளுமாறு நம்மைநபிமார்களையும், தூதர்களையும் அனுப்பி அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறார். சமூகத்தின் பார்வையில் தவறு செய்ய அஞ்சும் மனிதன் யாருக்கும் தெரியாமல் தவறுகள் பாவங்கள் செய்ய சந்தர்ப்பம் வரும் போது இறைவன் பார்த்து கொண்டிருக்கிறார். அவர் நம்மை தண்டிப்பார் என்று நம்பினாலும் தவறுகள் செய்ய அஞ்சுவதில்லை. சொற்ப காலமே

வாழும் இவ்வுலகின் தண்டனைகளுக்கு அஞ்சி சமூகத்தின் பார்வையில் தவறுகள் செய்யாமல் இருக்கும்மனிதர்கள்இறைகட்டளைகளை, வேதத்தின் படியே நடக்க வேண்டும் என்ற கட்டளையை மீறுவதில் அச்சம் கொள்வதில்லை. என்றென்றும் நரகம் என்ற இறைவனின் தண்டனைக்கு அஞ்சுவதில்லை.

சமூக அங்கீகாரம் கிட்டாமல் போய்விடுமே என்று அஞ்சக்கூடிய மனிதன்,உதாரணமாகஉறவினர்களின் உறவு சீர்கெட்டுப்போய்விடுமே, ஊர் ஜமாஅத் அங்கீகாரம் கிடைக்காமல் போய் விடுமே, இஸ்லாமிய சமூகத்தின் அங்கீகாரம் கிடைக்காமல் போய் விடுமே என்றெல்லாம் அஞ்சி சத்தியத்தைத் தெரிந்து கொண்டாலும் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறான் மிகச்சரியானதாக இருந் தாலும் உலக மனிதர்களின் வாழ்வியல் முறைக்கு மாற்றமாக உள்ளதே என்று அஞ்சுகிறான்.

இது உண்மையான இறை அச்சமுடையவர்களின் இயல்பல்ல. மெய்யான இறை அச்சமுடையவர்கள் தூதர்களிடம் இருந்து பெற்ற செய்தியை ஏற்றுக்கொண்டதும், சமூகத்தால் தனிமைப்படுத்தப்படுதல் போன்ற சில தொந்தரவுகள் அடையவே செய்வார்கள். முஹம்மத் நபி இந்தக்குர்ஆனைச் சொன்னபோது முதலில் ஏற்றுக் கொண்டவர்கள், பெரும்பான்மையான நிராகரிப்பாளர்களுடன் வியாபாரம், உறவு, நட்பு ஆகியவற்றை இழக்க நேரிட்டது. ஆயினும் அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொண்டதால் இறைவன் அவர்களுக்கு உதவிசெய்து இவ்வுலகிலும், மறுமையிலும் வெற்றியைத் தந்தார் என்று குர்ஆன் கூறுகிறது.

ஆகவே நடுநிலையாளர்களே! உங்களால் ஒரு கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் கவனித்து கேளுங்கள். கவனித்துக் கேட்காவிட்டால் சத்தியம் விளங்காமல் போய் உங்கள் வாழ்வின் மிகப்பெரிய நஷ்டத்தை நீங்கள் அடைய நேரிடலாம். சத்தியத்தை விளங்கி ஏற்றுக்கொண்டவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் மகத்தான வெற்றியை இறைவன் வாக்களிக்கிறார். (16 : 97)

எல்லாருக்கும் தெரிந்த விஷயம் தானே - கூறுகிறார்கள் என்று எண்ணாமல், சகோதரர்களே உங்களுக்கு, குறிப்பாக உங்களுக்கு இன்றைய நிலையை கருத்தில் கொண்டு கூறப் படுவது இது என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

தனிமைப்படுத்தப்படுவோமோ என்று மனம் அஞ்சக்கூடும். தனி ஒருவனாக இருந்தாலும் இறை கட்டளைகளை ஏற்று நடக்க முடியும். ஏற்று நடக்க வேண்டும் அப்பொழுதுதான் இம்மை, மறுமைப் பேறுகளைப் பெற முடியும்.

இறைவனின் அடியார்களே சமூகத்திற்கு அஞ்சாதீர்கள். இறைவனுக்கு மட்டுமே அஞ்சுங்கள்.

# இறைவனின் முத்திரை - 19

சென்ற இரு இதழ்களிலும் அல்குர்ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் அற்புதமான ஒரு கணிதக்கட்டமைப்பில் அமைக்கப்பட்டிருப்பது குறித்த ஒரு சில தகவல்களைக் கண்டோம்.

குர் ஆன் முழுமையும் கணிணியில் (Computer) புகுத்தி அதை முழுமையாக ஆராய்ந்து போது, குர் ஆனில் உள்ள எல்லா அம்சங்களும் 19' என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்டு கணிதக் கட்டமைப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் 1974 ல் வெளிவந்தது. அதை அறிந்து உலகமே வியந்தது. குர்ஆனில் '19' என்ற எண்ணைப்பற்றி அத்தியாயம் 74'ல் தான் இறைவன் கூறுகிறார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. (74:30)

அத்தியாயம் 74ல் இறைவன் இந்த 19 என்ற எண் நம்பிக்கை கொண் டோருக்கு நம்பிக்கையை அதிகப்படுத்தும் என்றும், வேதம் கொடுக்கப்பட்டோருக்கு உறுதியைக் கொடுக்கும் என்றும், வேதம் கொடுக்கப்பட்டோருக்கும் நம்பிக்கை கொண்டோருக்கும், சந்தேகத்தை அறவே நீக்கும் என்றும் நிராகரிப்போருக்கு குழப்பமாகவும், சோதனையாகவும், இருக்கும் என்றும், நிராகரிப்போருக்கும், நயவஞ்சகர்களுக்கு மட்டும் புரியாமல் போவதன் மூலம் அவர்களை வெளிப்படுத்தும் என்றும் கூறுகிறார்.

சென்ற இதழில் நாம் கண்ட '19' பற்றிய தகவல்கள் இறை நம்பிக்கை கொண்ட நமக்கு நம்முடைய நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்து வதாகவும் அமைந்தது. மேலும் வேதம் கொடுக்கப்பட்டோரிடம் அத்தகவல்களை நாம் கூறினால், அவர்களுக்கும் அல்குர் ஆன் மனிதசக்திக்கு அப்பாற்பட்ட கணிதக் கட்டமைப்பில் அற்புதமாக அமைக்கப்பட்டிருப்பதால் இது இறை வேதம்தான் என்று அதற்கு முன் இல்லாத உறுதியைக் கொடுக்கும். நம்பிக்கை கொண்டவர்களுக்கும், வேதம் கொடுக்கப்பட்டோருக்கும் உள்ள சந்தேகங்களை அறவே நீக்கும் என்பதையும் நன்கறிகிறோம்.

இப்பொழுது இந்த 19' என்ற எண் நிராகரிப்போருக்கு சோதனையாகவும், நயவஞ்சகர்களை அடையாளம் காட்டும் என்றும் கூறுவதன் பொருள் என்ன என்பதையும் எவ்வாறு இந்த எண் அவர்களை அடையாளம் காட்டுகிறது என்பதையும் இந்த இதழில் காண்போம்.


இந்தப் 19 என்ற எண் குறிப்ப தென்ன? அது எண்களில் முதன்மையான '1'ஐயும் கடைசியான '9' ஐயும் தன்னில் கொண்டதாக உள்ளது. இது இறைவன் தான் முதன்மையானவர் மேலும் இறுதியானவர் (57:3) என்பதைக் குறிக்கிறது.

அது மட்டுமின்றி வாஹித் - ஒன்று என்ற அரபி வார்த்தையின் எண்மதிப்பு 19' ஆகும் (எண் மதிப்பைப்பற்றிய விளக் கங்களை பிற பக்கங்களில் பார்க்கவும்) இது நமது கடவுள் ஒன்றுதான் என்பதையும் குறிக்கிறது.

மேலும் ஒரு கணிதக் கட்டமைப்பில் ஆக்குவதற்கு '19' ஒன்றும் மிகவும் இலகுவான எண் அல்ல. அது (Prime Number) ஆகும். இந்த எண் தன்னாலோ, அல்லது ஒன்றினாலோ மட்டுமே வகுபடும். உதாரணமாக 10 என்ற எண் 5 ல் வகுபடும், 2 லும் வகுபடும். 6 என்ற எண் 2 ஆல் வகுபடும் 3ஆலும் வகுபடும். ஆனால் Prime Number வகையைச் சார்ந்த 19 என்ற இந்த எண் 19ஆல் அல்லது ஒன்றால் வகுபடும். எனவே இத்தகைய எண்ணைக் கொண்டு ஒரு முழு புத்த கத்தைக் கணிதக் கட்டமைப்பில் ஆக்குவது சுலபமான தல்ல.

இத்தகைய ஒரு சிறப்பான, மனிதர்களுக்குக் கடினமான பிரைம் நம்பரைத்தான் இறைவன் தன் வேதத்தைக் கட்டுவதற்கு பயன்படுத்திருக் கிறார். குர் ஆனில் எல்லா அம்சங்களும் இந்த எண்ணைக் கொண்டே கட்டமைக் கப்பட்டுள்ளன என்பது குறித்த ஒரு பகுதி தகவல்களையே சென்ற இதழ்களில் நாம் கண்டோம். இன்னும் உள்ள இது போன்ற அற்புதத் தகவல்களை நாம் வரும் இதழ்களில் தொடர்ந்து காண்போம். எனினும் இதுவரை கூறப்பட்டுள்ள தகவல்களே அல்குர்ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஓர் அற்புதமான ஒழுங்கு முறையில் அமைக்கப் பட்டடிருக்கிறது என்றும் நிரூபிக்கப் போதுமானதாக இருக்கிறது. இதுவே அல்குர் ஆன் இறைவனிடம் இருந்துதான் இறக்கப்பட்டுள்ளது என்பதையும் நிரூபிக்கிறது.

ஆயினும் இந்த '19' என்ற எண்ணின் வேலை, இது, இறைவனிட மிருந்துதான் இறக்கப்பட்டது என்பதை





படம் -1 இந்தியா, பாகிஸ்தானில் அச்சிடபடும் பிரதிகள்

நிரூபிப்பது மட்டுமல்ல குர் ஆனை ஒரு அட்சரம் மாறாமல் பாதுகாப்பதும் இந்த '19' தான். இந்த எண் எவ்வாறு அற்புதமான முறையில் இந்த வேலையைச்செய்கிறது என்பதைப் (Demonstration) பார்ப்போமா?

இறைவன் தன் திருமறையில் தானே இந் நினைவூட்டலை '. (குர்ஆனை) இறக்கியதாகவும் , தானே அதைப்பாதுகாப்பதாகவும் கூறுகிறார் ( 1 5 : 9 ) பாதுகாப்பு என்றால் என்ன? எப்படி? பாதுகாப்பு என்றால் அதன் ஒவ்வொரு எழுத்தும் எழுத்தைக் கூடச் சேர்க்கவோ நீக்கவோ முடியாமல் பாது காக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லவா?

இருப்பினும் இன்று உலகில் பல குர்ஆன் பிரதிகள் தவறான அமைப்பில் அச்சிடப்படுவதை நாம் காண்கிறோம். அருகில் (படம் - 1) கொடுக்கப்பட்டிருப்பது 96ம் அத்தியாயத்தில் முதல் ஐந்து வசனங்கள் தவறான முறையில் எழுதப்பட்டிருக்கும் மூன்று குர்ஆன் பிரதிகளாகும் (இவை பிக்தால், யூசுப் அலி, ஷேர் அலி ஆகியோரின் ஆங்கில மொழி பெயர்ப் புகளில் அச்சிடப்பட்டிருக்கும் குர்ஆன் பிரதிகள் ஆகும். இதில் அம்புக் குறியிடப்பட்ட இன்ஸான் என்ற அரபி வார்த்தையில்


(٩٦) سُورَةُ العَلَقِ مَكِّيَّة
وَآيَاتُهَا تِسْعَ عَشْرَةَ

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ① خَلَقَ الْإِنسَٰنَ
مِنْ عَلَقٍ ② اقْرَأْ وَرَبُّكَ الْأَكْرَمُ ③ الَّذِي عَلَّمَ
بِالْقَلَمِ ④ عَلَّمَ الْإِنسَٰنَ مَا لَمْ يَعْلَمْ ⑤

படம் - 2 அல்அஸ்ஹர் அங்கீகாரம் பெற்றபிரதி

அலிஃப், நூன், ஸீன், அலிஃப், நூன் ஆகிய ஐந்து எழுத்துக்கள் இடம் பெறுவதைக்கவனியுங்கள். அருகில் (படம் - 2 ) கொடுக்கப் பட்டிருப்பது அதே வசனத்தின் அல் அஸ்ஹர் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி ஆகும். இதில் இன்ஸான் என்ற வார்த்தையில் அலிஃப், நூன், ஸீன், நூன் ஆகிய நான்கு எழுத்துக்கள் மட்டும் அச்சிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

உலகில் சில பகுதிகளில் அச்சிடப்படும் குர்ஆனில் 'இன்ஸான்' என்ற வார்த்தையில் ஐந்து எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. எகிப்தின் பல்கலைக்கழகமான அல்-அஸ்ஹர், அங்கீகாரம் பெற்ற பிரதியிலோ இன்ஸான் என்ற - வார்த்தைக்கு நான்கு எழுத்துக்களே பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு எழுத்து மாற்றப்பட்டிருப்பதை நாம் கண்களால் பார்க்கிறோம். இவ்வாறு நடந்திருப்பதால் இறைவனின் வேதம் பாதுகாக்கப்படவில்லை என்று கூற முடியுமா? நிச்சயம் இல்லை ! ஏனெனில் சரியான குர் ஆன் இவ்வுலகில் பாதுகாக்கப்பட்டு இருந்தே வருகிறது. அதை நம்பிக்கை கொண்டவர்களுக்கு இறைவன் அடையாளம் காட்டுகிறார்.

இப்பொழுது முதலில் காட்டப் பட்டிருப்பது சரியானதா அல்லது இரண்டாவது காட்டப்பட்டிருக்கும் அல் அஸ்ஹர் அங்கீகாரம் பெற்றது சரியானாதா? எப்படி நாம் தெரிந்து கொள்வது? இங்குதான் இந்தக் கணிதக் குறியீடு வேலை செய்கிறது. எப்படி 19ஐக் கொண்டு குர்ஆன் கட்டப்பட்டிருக்கிறது என்பதை நாம் இப்போது
அறிந்திருக்கிறோம்.


மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனங்கள் முதன் முதலில் இறங்கிய 96ம் அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்களாகும் இவற்றில் '19' வார்த்தைகள் உள்ளன ! குர் ஆனைப் பாதுகாக்கும் காவலனாக இந்த 19 என்ற எண் உள்ளது! இப்பொழுது இருவிதமாகச் எழுதப்பட்டிருக்கும் இந்தக் குர் ஆன் வசனங்களில் எது சரியானது என்பதைப் '19' நமக்குக் காட்டுகிறது.


முதன் முதலில் இறங்கிய வசனங்களான இவை 19 வார்த்தைகள் கொண்டது மட்டுமல்ல அதில் இடம் பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையும் 19ன் பெருக்குத் தொகையே! (19 x 4 = 7 6 ) இப்பொழுது முதலில் காட்டப்பட்ட குர் ஆன் பிரதியில் அந்த ஐந்து வசனங்களில் உள்ள எழுத்துக்களை நாம் எண்ணினால் அதில் 78 எழுத்துக்கள் உள்ளன இது 19ன் பெருக்குத் தொகை
அல்ல 2 எழுத்துகள் கூடுகிறது.

இரண்டாவது காட்டப்பட்டிருக்கும் குர்ஆன் பிரதியில் உள்ள எழுத்துகளை நாம் எண்ணினால் அது சரியாக 76 எழுத்துக்கள் கொண்டதாக உள்ளது! இதுவே 19ன் பெருக்குத் தொகை ஆகும். 19x 4 = 7 6 முதலில் காட்டப்பட்ட குர்ஆன் பிரதியில் கூடுதலாக இரண்டு எழுத் துக்கள் உள்ளன. அந்தக் கூடுதலான இரண்டு எழுத்துக்கள் இன்ஸான் என்ற வார்த்தையில் பயன்படுத்தப்படும் ஒரு அதிகமான 'அலிஃப் தான்.

ஐந்து வசனங்களில் இருமுறை இன்ஸான் என்ற வார்த்தை இடம் பெறுவதனால் இரண்டு அலிஃப் எழுத்துக்கள் அதிகமாகின்றன. இதுவே அதில் உள்ள எழுத்துக்களை 78 ஆக்குகிறது. இறைவன் கூறுகிறார் (இது மனிதன் சொல்லல்ல) அதன் மேல் 19 இருக்கிறது. (74:30)எனவே முதலில் காட்டப்பட்டிருக்கும் குர்ஆன் பிரதிகளில் தான் தவறு உள்ளது என்பதையும் இரண்டாவதாக காட்டப்பட்டிருக்கும் அல் அஸ்ஹர் அங்கீகாரம் பெற்ற குர் ஆன் சரியான முறையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் 19' நமக்கு அறிவிக்கிறது. நாமே இதைப் பாதுகாப்போம் என்று இறைவன் கூறுவதன் பொருள் இதைப் பாழ்படுத்த மனிதன் முயற்சிக்க மாட்டான்

என்பதல்ல.ஏனெனில் இறைவேதங்களை நபிமார்களுக்குப் பின் வரும் நயவஞ்சகர்களும், நிராகரிப்பாளர்களும் சிதைக்க முயற்சி செய்வது (6:112) தொடர்ந்து வழக்கமாக நடந்து கொண்டே வருகிறது. இதனால்தான் முன்னர் இறைவனால் இறக்கிய வேதங்கள் சிதைக்கப்பட்டதும் ஒரு புதிய வேதத்தின்





Photocopy from the Tashkent Quran.

தேவை ஏற்படுகிறது. முந்தைய வேதங்களில் இல்லாத ஒரு சிறப்பு அல்குர்ஆனில் உள்ளது. இது இறுதிவேதமாக இருப்பதனால் இது இறைவனால் பாதுகாக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு என்றால் அது யாரும் வேதத்தைச் சிதைக்க முயலாமல் தடுப்து என்பது அல்ல! யாரும் சிதைத்து விட்டாலும் அதைக் காட்டிக் கொடுப்பது தான் பாதுகாப்பு. யாரும் சிதைக்க முற்படாவிட்டால் அது பாதுகாக்கப்பட்டது என்பதை உலகம் எப்படி அறிந்து கொள்ளும்? குர் ஆன் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம்தான் என்ன ?

இறைவன் இறக்கிய வேதத்தைச் சிதைக்க முயல்வது தீயவர்களின் இயல்பாகும். தீயவர்கள் உலகில் எப்பொழுதும் இருந்தே வருவதால் இறுதி வேதத்தையும் அவர்கள் சிதைக்க முயற்சி செய்யவே செய்தார்கள். ஆயினும் அவர்கள் சிதைத்தவற்றை இறைவன் அடையாளம் காட்டும்போது மெய்யாகவே இறுதி வேதம் பாதுக்காப்பட்டிருக்கிறது என்பதை உலகம் அறிந்து கொள்கிறது!

மேலே குறிப்பிட்ட உதாரணத்தில் அல்-அஸ்ஹர் அங்கீகாரம் பெற்றகுர்ஆன் சரியான முறையில் அச்சிடப் பட்டிருப்பதையும் மற்ற பிரதிகள் தவறாக அச்சிடப்பட்டிருப்பதையும் அதில் எது சரி என்பதையும் இங்கே நாம் கண்டோம். எனவே அல்-அஸ்ஹர் அங்கீகாரம் பெற்ற பிரதியே சரியான குர்ஆன் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் அதுவும் சிதைக்கப்பட்டதே என்பதையும் அந்தச் சிதைவையும் '19' எப்படி வெளிப்படுத்துகிறது என்பதையும் நாம் இங்கு காண்போம்.

மேலே நாம் காண்பது குர்ஆனில் அத்தியாயம் 7ல் இடம் பெறும் 69வது வசனம் எழுதப்பட்டிருக்கும் இரு பிரதிகள் ஆகும். வலப்புறம் நாம் காண்பது அல்-

அஸ்ஹர் அங்கீகாரம் பெற்ற பிரதி ஆகும். அதில் குறியிட்டுக்காட்டடப்பட்டுள்ள பஸ்ததன் என்ற வார்த்தையில் 'ஸாத்' என்ற எழுத்து இருப்பதைக் கவனியுங்கள் இடப்புறம் இடம் பெற்றிருப்பது இன்று உலகில் உள்ள மிகப் பழைய குர்ஆன் பிரதி ஆகும். இது தாஷ்கண்ட் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதில் குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கும் 'பஸ்ததன்' என்ற வார்த்தையில் ஸீன் என்ற எழுத்து இடம் பெறுவதைக் கவனிக்கவும் மிகப்பழைய குர் ஆன் பிரதியில் பஸ்ததன் என்ற வார்த்தையில் ஸீன் என்ற எழுத்து இடம் பெற்றிருக்கும் போது, அல்-அஸ்ஹர் அங்கீகாரம் பெற்ற குர்ஆனில் ஸீன் என்ற எழுத்தை மாற்றி ஸாத் என்ற எழுத்தை எழுதியிருக் கிறார்கள். இதில் எது சரி? தாஷ்கண்ட் பிரதியா அல்லது அல்-அஸ்ஹர் பிரதியா? (ஏன் மாற்றினார்கள் அதற்கு என்ன காரணம் கூறுகிறார்கள், என்பது போன்ற விபரங்களையும் அதில் உள்ள தில்லுமுல்லுகளையும் பின்னர் இன்னும் விரிவாகக் காண்போம்.)

இரண்டும் சரியே என்று அவர்கள் கூறினாலும் (அதில்) ஒன்று தான் சரி என்பதையும் இங்கே நாம் ஆதாரத்துடன் காண்போம்) ஏன் இரண்டு விதமான எழுத வேண்டும்? எல்லாப்பிரதிகளிலும் ஒரே மாதிரி ஏன் எழுதவில்லை ? ஸீன் ஐ ஸாத் ஆக மாற்றியவர்கள் ஏன் ஸீன் ஐ மேலே சிறிதாக எழுத வேண்டும்? எதோ தில்லு முல்லு நடந்திருப்பது புரிய வில்லையா? வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை எழுத்துக்கு எழுத்து இறைவனால் இறக்கி அவராலேயே பாதுகாக்கப்படுவது அல்ல வாஅல்குர் ஆன்? அவ்வாறிருக்கையில் இவ்வாறு செய்யும் துணிவு - இவர்களுக்கு எங்கிருந்து வந்தது? இவர்களின் சூழ்ச்சிகள் இறைவனிடம் பலிக்குமா? இவ்விரண்டில் எது சரி என்பதை 19' எப்படி அடையாளம் காட்டுகிறது தெரியுமா? அந்த அற்புதத்தைக் காண்போம் வாருங்கள்.

சென்ற இதழ்களில் உலகில் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத விதத்தில் அல்குர் ஆனின் 29 அத்தியா யங்கள் 14 எழுத்துக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 14 வகையான எழுத்துக் களைக் கொண்டு ஆரம் பிக்கிறது என்று கண்டோம். 29 (சூராக்கள்) + 14 (எழுத்துக்கள்) +14(வகைகள்) = 57(1985) அந்த முத்திரை எழுத்துக்கள் சம்பந் தப்பட்ட அத்தியாயங்களில் 19ன் பெருக்குத் தொகைகளாகவே அமைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் கண்டோம் உதாரணமாக யா, ஸீன் என்ற எழுத்துக்களைக் கொண்டு துவங்கும் அத்தியாத்தில் இடம்பெறும் யா, ஸீன் என்ற இரு எழுத்துக்களின் எண்ணிக்கை 285 ஆகும். அதாவது யா (237) + ஸீன் (48) = 285 (19 x 15) இவ்விதமாக 1400 வருடங்களாக யாராலும் அறிய முடியாத ரகசியமாய் பாதுகாக்கப்பட்டு வந்த முத்திரை எழுத்துக்களின் இரகசியத்தை இறைவன் இப்பொழுது இந்தக் கம்ப்யூட்டர்

யுகத்தில்வெளிப்படுத்திஇருக்கிறார்.

இந்த விபரங்களை மீண்டும் இங்கே நினைவுபடுத்துவதன் காரணம் என்ன வென்றால் மேலே நாம் கண்ட சிதைக்கப்பட்ட வசனம் 7வது அத்தியாயத்தில் உள்ளது. அந்த 7வது அத்தியாம் அலிஃப், லாம், மீம், ஸாத், என்ற நான்கு முத்திரை எழுத்துக்களோடு துவங்குவதாகும்.

இந்த அத்தியாயத்தில், முதல் வசனத்தில் முத்திரை இடப்பட்ட நான்கு எழுத்துக்களும் 19ன் பெருக்குத் தொகையாகவே இடம்பெற்றிருக்கிறது என்பதையும் நாம் அறிகிறோம். அதாவது இந்த அத்தியாயத்தில் இடம் பெறும் (அலிஃப்) 2529 + (லாம்) 1530 + (மீம்) 1164 + (ஸாத்) 97 = 5320 (19 x 280.)

மேற்கண்ட வசனத்தைச் சிதைத்த கயவர்கள் ஸீன் ஐ மாற்றி ஸாத் ஐ எழுதியதால் ஒரு ஸாத் எண்ணிக்கையில் அதிகமாகி விடுவதால், இறைவனின் கையொப்பம் 19' அதிகமான ஒரு ஸாத் ஐ அடையாளம் காட்டி அதைத் தள்ளி நிறுத்தி விடுகிறது. ஆம் அந்த ஒரு ஸாத்ஐ சேர்த்தால் இந்த அத்தியாத்தின் முத்திரை எழுத்துகளின் கூட்டுத்தொகை 5321 என்று ஆகும். இது 19ன் பெருக்குத் தொகை அல்ல! எனவே மேற்கண்ட இரு பிரதிகளிலும் சரியானது டாஷ்கண்ட் பிரதிதான் என்பதை நாம் இங்கே அறிந்து கொள்கிறோம்!

இவ்விதமாக இந்த 19 என்ற எண் குர்ஆனின் காவலனாகவும் அற்புதமான முறையில் செயல்படுகிறது! அது அல்குர்ஆனில் இடம்பெறும் ஒவ்வொரு எழுத்தையும் பாதுகாக்கிறது. இதனையும் மீறி, இறைவன் தான் பாதுகாத்துவிட்டார் என்கிறாரே அதனால் மனிதர்கள் ஒன்றும் செய்ய முடியாது, செய்யவில்லை என்பவர்கள் தங்கள் பூரண நம்பிக் கையை இறைவனிடம் வைக்காமல் மனிதர்களிடம் வைத்திருக்கிறார்கள். என்றே புரிந்து கொள்ள வேண்டும்

இப்பொழுது சற்று சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இந்த 19 என்ற எண் எப்படி அல்குர் ஆன் இறைவனிடம் இருந்து வந்ததை நிரூபிக்கிறது என்பதையும் எப்படி அது அல்குர்ஆனின் காவலானாக செயல் படுகிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும். அல்குர் ஆன் இப்பொழுது நிரூபிக்கப்பட்ட, உறுதிப்படுத்தப்பட்ட,
மெய்பிக்கப்பட்ட வேதமாகிவிட்டது! மேலும் நாமே இந்நினைவூட்டலை இறக்கினோம் மேலும் நாமே இதைப் பாதுகாத்துக் கொள்வோம். (15:9) கூறும் : எல்லா மனிதர்களும் எல்லா ஜின்களும் ஒன்று கூடி இந்தக் குர்ஆனைப் போல் ஒன்றைக் கொண்டு வர முயன்றாலும், அவர்களால் முடியாது. அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு உதவிக் கொண்டாலும் சரியே! (17:88) என்ற வசனங்களின் விரிவான அர்த்தங்களை இறைவன் மனிதர்களுக்கு அறிவிக்கும் நேரமும் வந்து விட்டது!

# பொய்ப்பிக்கும் தூதர்

வேதங்கள் அனைத்தும் வணக்கத்தைக் கலப்பின்றி இறைவனுக்கு மட்டுமே ஒருமையுடன் அர்ப்பணிக்க வேண்டும் என்பதையே முதல் கட்டளையாகக் கொண்டுள்ளன. பழைய ஏற்பாடு (டெட்ரானமி 6:4) புதிய ஏற்பாடு (மார்க் 12:29) (காய்த்ரி மந்திரம்) யஜுர் வேதம், மேலும் இறுதி ஏற்பாடான அல்குர்ஆன் (21:25) ஆகியவற்றில் இந்தச் செய்தி தெளிவாகக் காணப்படுகிறது.

இருப்பினும் இன்று யூதர்களில் பெரும்பாலானோர் 'தவ்றாத்தை' மட்டும் பின்பற்றுவதற்கு பதில் 'மிஷ்னாஹ்' ஜெமார' என்ற பெயரில் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட போதனைகளைப் பின்பற்றுவதன் மூலம் இறைவனுக்கு இணைவைக்கிறார்கள். கிறித்துவர்களோ நைசீன் கருத்தரங்கில் மனிதர்கள் கூடி முடிவு செய்த கொள்கைகளை, இன்னும் சில மனிதர்களின் சொற்களுடன் கலந்து, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற முக்கடவுள் கொள்கையை ஆக்கி வைத்திருக்கின்றனர். இறைவனுக்கு ஒரு மகன் என்று இறைவன் மேல் அவதூறு கூறுகின்றனர்.

முந்திய வேதங்கள் இறை விரோதிகளால் பாழ்படுத்தப்பட்ட போது அடுத்தடுத்து வேதங்களைத் தந்த இறைவன் இறுதி வேதமாக அல்குர்ஆன்ஐ ஆக்கி அதைப் பாதுகாப்பதாகவும் வாக்களித்திருக்கிறார்.

இருப்பினும் இறுதி வேதத்தை பெற்ற இஸ்லாமிய சமூகத்தின் இன்றைய நிலையோ மிகவும் குழப்பமானதாகவும் சரியில்லாததாகவும் இருக்கிறது. பிரிவுகள், (சுன்னத் ஜமா அத், ஷியா ஜமாஅத்) பிரிவுக்குள் பிரிவுகள் (ஹனபி, ஷாஃபி, மாலிக்கி, ஹன்பலி, அஹ்லஹதீஸ், காதியானிகள் என்று அது துண்டு துண்டாக இருக்கிறது. ஒவ்வொரு பிரிவினரும் தாங்கள் செய்வதே சரி என்று கூறுகிறார்கள்.

இன்று முஸ்லிம்களின் தொழுகை, நோன்பு, ஜக்காத் - தர்மம், ஹஜ் எனும் புனிதயாத்திரை போன்ற அனைத்தும் பாழ்படுத்தப்பட்டுவிட்டன தொழுகையில் நெஞ்சில் கை கட்டுவதா, வயிற்றில் கை கட்டுவதா, சாட்சி இருப்பில் விரலை ஆட்டுவதா, நீட்டுவதா என்ற குழப்பங்கள். பிறையைக் கண்ணால் பார்க்க வேண்டுமா, கணக்கிடலாமா என்ற குழப்பத்தால் வருடா வருடம் ரமலான் மாதத்தில் உலகம் முழுவதும் ஏற்படும் குழப்பம் எப்படி யாருக்குக் ஜாகாத் கொடுக்க வேண்டும் என்பதிலும் குழப்பம், நான்கு மாதங்கள் (2:197) செய்யக்கூடிய ஹஜ் யாத்திரையை 5 நாட்களுக்கு சுருக்கிய தால் அனைவருக்கும் ஹஜ் செய்யும் வாய்ப்பு மறுக்கப்படுதல், நெருக்கடி, அதன் பொருட்டு மரணம்

போன்ற குழப்பங்கள். யாருக்கும் குர் ஆனுடன் நேரடித் தொடர்பு இல்லை . ஹதீஸ்கள் என்ற செவிவழிச் செய்திகளின் அடிப் படையிலேயே குர் ஆனை அணுகுகிறார்கள்.

அது மட்டுமன்றி குர்ஆனைப் பின்பற்றும் சமுதாயத்திற்கு மாபெரும் வெற்றியை இறைவன் வாக்களிக்கிறார். (10:62-64, 16:97, 24:55, 41:30,31 7:96, 5:65-66) ஆனால் இன்றைய முஸ்லிம் சமுதாயம் உலகின் மற்ற சமுதாயங்களை விட, பொருளாதாரம், ராணுவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், போன்ற அனைத்துத் துறைகளிலும் பின்தங்கிய தாகவே உள்ளது. மெய்யாகவே இந்தச் சமுதாயம் இறைவழியில் இருந்திருந்தால் இத்தகைய இழி நிலையை அடைந் திருக்காது.

. இன்றைய முஸ்லிம்களனை வரையும் ஷைத்தான் குர் ஆனை விட்டு விலக்கி வைத்திருக்கிறான். அவன் அவர்களைக் குர் ஆனை கண்ணியப் படுத்த, புகழ அனுமதித்தான். ஆனால் புரிந்து கொள்ள, பின்பற்ற அனுமதிக் கவில்லை . குர் ஆனுக்கு முரணான ஏராளமான போதனைகளை (ஹதீஸ்கள்) நபியின் பெயரில் இட்டுக்கட்டி அச் செய்திகளைப் பின்பற்ற செய்து விட்டான்.

குர்ஆன் புறந்தள்ளப்பட்டு ஹதீஸ்கள் அந்த இடத்தை ஆக்கிர மித்துக் கொண்டதால் அவற்றைப் பின்பற்றும் இந்தச் சமுதாயம் நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது. இவர்களின் இந்தத் தோல்விகளால் அகிலத்தாருக்கெல்லாம் வழிகாட்ட இறைவன் அருளிய அல்குர் ஆன் மேலேயே மனித சமுதாயம் சந்தேகம் கொள்ள ஆரம்பித்துவிட்டது.

இறைவன் இஸ்லாமிய சமூகத்தின் குழப்பத்தைத் தெளிவுபடுத்தி எது சரியான இஸ்லாம் என்பதை அவர் களுக்குக் காட்டவும், அல்குர் ஆன் இறை வேதம்தானா என்ற மனித சமுதாயத்தின் சந்தேகத்தை நீக்கி குர்ஆனை
மெய்ப்பிக்கவும் நாடி விட்டார்.

முஹம்மத் இறுதி நபி, ஏனெனில் இறுதி வேதமான அல்குர் ஆனை இறை வனிடமிருந்து பெற்று உலகிற்கு தந்தவர், குர்ஆனின் அடிப்படையில் முஹம்மத் இறுதித் தூதர் அல்ல (33:40) என்றும், முஹம்மதுக்குப்பின், இருக்கும் வேதத்தை பிரசாரம் செய்யவும், மெய்ப் பிக்கவும் ஒரு தூதர் வருவார் என்றும் குர்ஆன் கூறுகிறது. (3:81)

துரதிருஷ்டவசமாக சமகாலத்தில் ஒரு இறைத்தூதர் என்ற விஷயத்தை மனித மனம் வெறுக்கிறது. முந்திய தூதர்களும், முஹம்மத் நபியும், அவர்கள் காலத்தில் வாழ்ந்த மனிதர்களால் கேலி செய்யப்பட்டார்கள், எள்ளி நகையாடப் பட்டார்கள் என்று குர் ஆன் நமக்குக் கூறுகிறது.

"இவர்தான் தன்னை இறைத்தூதர் என்று கூறிக்கொள்கிறாரா, இவர்தான் அனைத்து தெய்வங்களையும் ஒன்று ஆக்கியவரோ, இவர்தான் - உங்கள் கடவுளர்களை அவமதிக்கிறாரா, ஏன் இறைவன் இவரை விட சிறந்த மனிதரை தூதராக ஆக்கவில்லை", ஏன்றெல்லாம்

முஹம்மத் நபி பரிகாசம் செய்யப் பட்டார்கள். (21:36, 23:44, 25:41, 43:31)

யூசுப் நபி வாழ்ந்த வரையில் அவரைச் சந்தேகத்தோடும், அவமதிப் போடும் நடத்தினார்கள். ஆனால் அவர் இறந்து விட்ட பின்னர் மக்கள் அவரே இறுதித்தூதர் என்று அறிவித்தார்கள். இவ்வாறே, வரம்புமீறி சந்தேகிப் பவர்களை இறைவன் வழிகேட்டில் விட்டுவிடுகிறார் என்று 40:34 கூறுகிறது.

இவ்வாறே, இன்று பெரும்பான் மையான முஸ்லிம்கள் முஹம்மத் நபிதான் இறுதித்தூதர் என்றும் நம்புகிறார்கள். இது முஹம்மத் நபியின் போதனையான குர்ஆனுக்கு மாற்றமானதாகும். (7:35, 33:40, 3:81, 72:24-28)

இறைவன் தன் இறுதி வேதமான அல்குர் ஆன், கோணல் இல்லாத, குழப்பங்கள் இல்லாத, தெளிவான, விவரிக்கப்பட்ட புத்தகம் என்று உறுதியளிக்கிறார். (6:19, 38) சிந்தித்து விளங்கிக் கொள்பவர் களுக்கே இந்தக் குர்ஆன் நேர்வழி காட்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். இதயமிருந்தும் சிந்திக்காதவர்களை, கண்களிருந்தும். பார்க்காதவர்களை, காதுகளிருந்தும் கேட்காதவர்களை கால்நடைகளை விடவும் மோசமானவர்கள் (7:179) என்று கண்டனம் செய்கிறார். எனவே இறையடியார்கள் அல்குர் ஆனில் இறைவன் என்ன கூறுகிறார் என்பதை நன்கு சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தியாயம் 3 வசனம் 81, 82 ஆகியவற்றை எந்தக் குர்ஆன் மொழிபெயர்ப்பில் எடுத்துப் பார்த்தாலும் இறைவன் நபிமார்களிடம், நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத் தையும் கொடுப்பேன், பின் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் தூதர் வருவார், அவரை நீங்கள் நம்பி, அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று உறுதி மொழி எடுத்த செய்தியை விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வசனத்தை நிதானமாக, நாம் சிந்தித்தால் இறைவன் நபிமார்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுப் பதாக உறுதியளித்திருக்கிறார், எனவே நபிமார்கள் அனைவருக்கும் வேதம் கொடுக்கப்படும், வேதம் கொடுக்கப் பட்டால் அவர் நபி என இந்த வசனம் நபியின் இலக்கணத்தை நமக்குக் விளக்கிக் கூறுவதை விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வசனத்தின் அடுத்த பகுதியில் நபிமார்கள் அனைவருக்கும் வேதம் கொடுக்கப்பட்ட பின் அவ்வேதங்களை மெய்ப்பிக்க ஒரு தூதர் வருவார் என்றும் அவரை நம்பி அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் நமக்கு அறிவுறுத்துகிறது.

முஹம்மத் நபி இறுதி வேதத்தை உலகுக்கு தந்து, சென்று விட்டார்கள். இத்தெளிவான வசனம் இறுதி வேதத்தை மெய்ப்பிக்க ஒரு தூதர் வருவார் என்று தெளிவாகக் கூறுவதிலிருந்து புழக்கத்தில் இருக்கும் வேதத்தை மெய்பிக்க வருபவர்

தூதர் என்றும் தூதருக்கான இலக்கணத் தையும் நாம் அறிகிறோம்.

குர்ஆனை மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது நாங்கள் அனைவரும் குர்ஆனை இறைவேதம் என்று அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறோமே, என்று கூறி ஆவேசப்படும் பாரம்பரிய பெயர்தாங்கி முஸ்லிம்கள் தாங்கள் மெய்யாகவே குர் ஆனை நம்பி அதனைப் பின்பற்று கிறோமா அல்லது அதில் இருந்து விலகி இருக்கிறோமா என்பதைச் சற்று சிந்தித்தால் உண்மை தெளிவாகி விடும். மேலும் மிகச் சீரழிந்த நிலையில் இருந்து கொண்டு, குர்ஆன் இறைவேதம் நாங்கள் இதனைத்தான் பின்பற்றுகிறோம் என்று இந்த முஸ்லிம் சமுதாயம் கூறுவதை பிற சமூகத்தார் சந்தேகக் கண்களுடனே பார்க்கிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை .

எனவே மெய்யாகவே குர்ஆன் இறைவேதம்தான், அதை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று முஸ்லிம் களுக்கும், பிற சமுதாயத்தவர்க்கும் எடுத்துக் கூறி, குர் ஆனின் பக்கம் மனிதர்கள் கவனத்தைத் திருப்ப, குர்ஆனை மெய்பிக்க வேண்டிய அவசியம் நிச்சயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை குர்ஆன் வசனம் 25:30 நமக்கு முன்னறிவித்தது. "தூதர் கூறுவார், என் இரட்சகரே நிச்சயமாக என் சமூகத்தார் இந்தக் குர் ஆனைப் புறக்கணித்து விட்டார்கள்". நிச்சயமாக இன்றைய முஸ்லிம்கள் குர்ஆனைப் புறக்கணித்து விட்டார்கள் என்பது தெளிவான உண்மை. எனவே தான் இறைவன் கூற்றுப்படி இவ்வேதத்தை மெய்ப்பிக்க, எது சரியான இஸ்லாம் என்பதை உலகுக்கு அறிவிக்க ஒரு இறைத்தூதரின் தேவை ஏற்பட்டிருக்கிறது.

குர்ஆன் முன்னறிவிக்கும் இந்தத் தூதரின் வருகையிலிருந்து மக்கள் கவனத்தைத் திருப்பவே ஷைத்தான், மஹ்தி வருகை, ஈஸா நபியின் வருகை போன்ற பொய்யான கற்பனையான விஷயங்களை ஹதீஸ்களில் ஸ்தாபித் திருக்கிறான்.

மெய்ப்பிக்கும் தூதரை எப்படி அடையாளம் கண்டு - கொள்வது என்பதற்கான குறிப்பு அந்த வசனத் திலேயே கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர் குர்ஆனை மெய்பிப்பவராக இருப்பார். மெய்ப்பித்தல் என்பது, ஆம் இது உண்மைதான் என்று சொல்வது மட்டுமல்ல. அது உண்மைதான் என்பதற்கான ஆதாரங்களைத் தருவதே மெய்பிப்பிப்தாகும்.

1974 ம் வருடம் (Dr. Rashad Khaleefa) Dr. ரஷாத் கலீபா என்ற எகிப்திய முஸ்லிம், அமெரிக்காவில் இருந்து மனித சமுதாயத்தின் வரலாற்றில் கேள்விப்பட்டிராத ஓர் அற்புதத் தகவலை வெளியிட்டார்.

குர்ஆன் முழுவதும் மனிதசக்திக்கு அப்பாற்பட்ட முறையில் ஓர் அற்புதக் கணிதக் கட்டமைப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதே அது. குர் ஆனில் உள்ள அனைத்து

விஷயங்களும் '19' என்ற எண்ணைக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரபூர்வமாக அவர் நிரூபித்தார். மேலும் 1400 வருடங்களாக இறைவனால் மறைத்து வைக்கப்பட்ட, குர்ஆனில் உள்ள ஹீருஃபுல் முகத்த ஆத் என்னும் முத்திரை எழுத்துக்களின் விளக்கத்தை, அவை இந்த '19' என்ற எண்ணின் அடிப்படையில் அமைந்த அற்புதக் கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமே என்பதையும் அவர் உலகுக்குக் காட்டினார். அதன் மூலம் உலகம், அல்குர் ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் அமைக்கப்பட்டிருப்பதால் அது இறைவனிடமிருந்து இறக்கப்பட்ட வேதம்தான் என்பதை அறிந்து கொண்டது. மேலும் அல்குர் ஆனில் எந்த ஒரு சிறு மாற்றமும் செய்தாலும் அதை இந்த அற்புதக் கணிதக் கட்டமைப்பு வெளிப்படுத்தி விடும் என்பதால் அது ஒரு எழுத்துக் கூட மாற்றம் செய்ய முடியாதவாறு இறைவனால் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்றும் புரிந்து கொண்டது.

அன்றைய முஸ்லிம் உலகம் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. முஸ்லிம் உலகெங்கும் Dr. ரஷாத் கலீஃபா என்ற பெயர் பிரபலமானது. சவூதி அரசின் பாராட்டுப் பத்திரம் பெற்ற அஹ்மத் தீதாத் என்ற இஸ்லாமியப் பிரசாரகர் (Al-Quran The Ultimate Miracle) என்ற பெயரில் Dr. ரஷாத் கலீஃபாவைப் பற்றியும் இந்த 19' என்ற எண் எப்படி அற்புதமான முறையில் குர் ஆனில் உள்ள விஷயங்களை மெய்ப்பிக்கிறது என்பதைப் பற்றியும் எழுதினார். அதில் Dr. ரஷாத்கலீபாவை மாபெரும் இஸ்லாமிய சேவகர் என்று புகழ்ந்தார். அது இலட்சக்கணக்கான பிரதிகள் அச்சடிக்கப்பட்டு உலகெங்கும் வினியோகிக்கப்பட்டது. விஞ்ஞானக் கருத்தரங்குகளில் இவ்வற்புதம் விவரித்துச் சொல்லப்பட்டது.

1400 வருடங்களாக குர்ஆன் மனிதர்கள் கையில் இருந்தாலும், அதில் மறைக்கப்பட்டு இருந்த 19' என்ற அற்புதத்தை முத்திரை எழுத்துக்களின் இரகசியத்தை Dr. ரஷாத் கலீஃபா என்ற மனிதரைத் தன் தூதராக இறைவன் தேர்ந்தெடுத்து பல செய்திகளையும் வெளிப்படுத்தினார்.

அல்குர் ஆனை ஒரு அட்சரம் கூட மாற்றாமல் அப்படியே பாதுகாத்துத் தந்தவர்கள் எங்கள் நபியின் தோழர்களே என்று எண்ணிக்கொண்டு அவர்கள் நபி கூறியதாக என்ன கூறினாலும், அது குர் ஆனுக்கு முரணாக இருந்தாலும் அப்படியே சிந்திக்காமல் எடுத்து செய்லபட்டுக் கொண்டிருக்கிறார்கள் இன்றைய முஸ்லிம்கள். அந்த எண்ணம் தவறு என்பதை Dr. ரஷாத் கலீபா ஆதார பூர்வமாக நிரூபித்தார். (பார்க்க இறைவனின் முத்திரை - 19.)

நபித் தோழர்கள் கூறியதாகச் சொல்லப்பட்ட ஹதீஸ்களை நம்பிச் செயல்பட ஆரம்பித்ததால் இன்றைய முஸ்லிம் சமுதாயம் முஹம்மது நபியையும், நபித்தோழர்களையும், நல்லடியார்களையும், இறைவனுடன் இணைவைத்து கொண்டிருக்கிறது என்பதை குர் ஆன் ஒளியில் வெளிப்

படுத்தினார். இன்றைய முஸ்லிம் சமுதாயம் குர் ஆனைப் புறக்கணித்து ஹதீஸ்களை நம்பிச் செயல்பட்டதால், இணைவைப்பு என்றால் என்ன என்பதை அறியாமலேயே இணைவைத்துக் கொண்டிருக்கிறது என்பதை குர் ஆனைக்கொண்டேதெளிவுபடுத்தி னார். முஸ்லிம்களின் எல்லா விதமான இணைவைப்புகளையும் தெளிவுபடுத்தி அவற்றிலிருந்து விலகிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

"19" என்ற அற்புத ஆதாரத் தினடிப்படையில் இவர்கள் வணங்கிக் கொண்டிருக்கும் ஆலிம்கள், (9:31) அல்குர் ஆனில் செய்த குளறுபடிகளை எடுத்துக் கூறினார். குர் ஆனுக்கு ஹதீஸ்களின் அடிப்படையில் பற்பல விளக்கங்கள் கொடுத்து மக்களைக் குழப்பிக் கொண்டிருந்ததையும் சுட்டி காட்டினார். அன்றைய ஆரம்ப காலக் குழப்பங்களுக்கு குர்ஆன் மட்டுமே தீர்வாக இருந்தது போல் இன்றையக் குழப்பங்களுக்கும் தீர்வு குர் ஆனில் மட்டுமே இருக்கிறது என்பதை இறைவனின் ஆதாரத்துடன் விளக்கிக் கூறினார். குர்ஆனுக்கு உலக மொழியான ஆங்கிலத்தில் ஒரு ஆதாரபூர்வமான, அங்கீகாரம்பெற்றமொழிபெயர்ப் பையும் வெளியிட்டார். (இன்ஷா அல்லாஹ் நம் இதழில் தொடர்ந்து அதன் தமிழாக்கம் வெளிவரும்.)

தன்னை மிகவும் மதித்து கண்ணியப்படுத்தி புகழ்ந்து கூறிக் கொண்டிருக்கும் இந்த முஸ்லிம் சமுதாயம் தூக்கிக் கீழே எறிந்து விடும், இகழ, ஆரம்பிக்கும், உயிருக்கும் கூட ஆபத்து ஏற்படுத்தும் என்றெல்லாம் நன்கறிந் திருந்தும் இறைவனின் கட்டளைப்படி 3:81ல் முன்னறிவித்த மெய்ப்பிக்கும் தூதர் தானே என்றும் அறிவித்தார்.

உடனே தங்களின் இணைவைப் பிலிருந்து மீள விரும்பாத, தங்களைச் சீர்திருத்திக் கொள்ள விரும்பாத இன்றைய முஸ்லிம் சமுதாயம் அவரைப் பொய்யன் என்றும் இட்டுக்கட்டிக் கூறுபவன் என்று இகழ ஆரம்பித்து (54:25) சவூதி அரசு உலக ஆதாயங் களைக் காட்டி மயக்கப் பார்த்தது, மசியா விட்டால் கொன்று விடுவோம் என்று அச்சுறுத்தியது. 19' என்ற அற்புதத்தை மறைக்கப் பல கோடி ரூபாய்கள் செலவு செய்தது. இறைத் தூதர்கள் இத்தகைய மிரட்டல்களுக் கெல்லாம் அஞ்சுவார்களா என்ன? அவரின் பிரசாரத்தை முடக்குவதற்கு அவரைக் கொன்று விட்டால் பிரச்சனை தீர்ந்து விடும் என்று எண்ணி 1990 ம் வருடம் ஜனவரி 31ந் தேதி இறைவனை நிராகரித்த சில கயவர்கள் அவரைச் சுட்டு கொன்று விட்டார்கள்.

எத்தனையோ நபிமார்களும் தூதர்களும் கொல்லப்பட்டதைக் குர்ஆன் நமக்குக் கூறுகிறது (2:61, 91, 3:21, 112, 181, 183, 4:155, 8:30) ஆயினும் தூதர்கள் தங்கள் தூதுச் செய்தியை இறைவன் உதவியால் உலகுக்கு எத்திவைத்தே தீருவார்கள்.

மெய்ப்பிக்கும் தூதரைக் கொன்று விட்டால் தங்கள் பொய்களைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கலாம் என்று எண்ணிய சூழ்ச்சிக்காரர்களின்

சூழ்ச்சியை திட்டமிடுவதில் மிகப்பெரிய திட்டமிடுபவரான இறைவன் முறியடித்து உலகமெங்கும் இச்செய்தி பரவுவதற்கு வழிவகைகளை அமைத்தார்.

Dr. ரஷாத் கலீஃபாவின் ஆங்கில மொழிபெயர்ப்பை பல்லாயிரக்கணக்கான பிரதிகள் வாங்கி எரித்தது சவூதி அரசு. 19 எனும் மாபெரும் அற்புதத்தைப் பொய்யென்று பிரசாரம் செய்தது முல்லாக்கள் சமுதாயம். இவ்வாறு செய்வதன் மூலம் முஸ்லிம் சமுதாயத்தின் மீது தங்களுக்குள்ள பிடியைத்தளர விடாமல் தக்ககவைத்துக் கொள்ளலாம் என்பது அவர்கள் திட்டம்.

மெய்ப்பிக்கும் தூதரின் செய்தியை உலகெங்கும் பரவி இருக்கும் தகவல் நெடுஞ்சாலையான (Information High Way) இன்டர்நெட்டின் மூலம் உலகெங்கும் பரப்ப இறைவன் ஏற்பாடு செய்தார். இன்று ஸவூதியிலேயே w.w.w.http//submission.org என்ற விலாசத்தில் Dr.ரஷாத் கலீஃபாவின் குர் ஆனை மெய்ப்பிக்கும் செய்தியை பார்த்து அறிந்து கொள்ளலாம். அதை ஸவூதி அரசால் தடுக்கக் கூட இயலாது. தூதர் கொல்லப்பட்டு 8 ஆண்டுகளுக் குப்பின் இங்கே தமிழகத்தில் செய்தி பரவுவதைப்போல உலகெங்கும் இந்தச் செய்தி பரவிக் கொண்டிருக்கிறது. போலி மதவாதிகளின் முகத்திரைகள் தொடர்ந்து கிழிக்கப்பட்டு வருகிறது.

இறைவன் தன் தூதர்களை நம்பிக்கை கொண்டவர்கள் அடையாளம் கண்டு கொள்வதில் எந்த சிரமத்தையும் ஆக்கவில்லை. தன் தூதர்களுக்கு அளவுகோல்களாக மூன்று விஷயங்களை இறைவன் குறிப்பிடுகிறார். அவற்றில் முதலாவது 21:25ல் கூறப்படுகிறது. "உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) இறைவன் என்னைத்தவிர வேறுஎவருமில்லை. எனவே என்னையே நீங்கள் வணங் குங்கள் என்று நாம் வஹீ அறிவிக் காமலில்லை".

இவ்வசனத்திலிருந்து இறைத்தூதர்களின் முதல் வேலை இறைவனுக்கு இணைவைப்பதை விட்டு மக்களைத் தடுத்து இறைவனை மட்டுமே வணங்கும்படி அவர்களை ஏவுவதே என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். இறைத்தூதர்களின் முதல் கடமையை சைத்தானால் செய்ய முடியாது அல்லவா?

முஹம்மத் நபிக்குப் பின் இன்று வரை தங்களை இறைத்தூதர்கள் என்று கூறிக் கொண்டவர்கள் பலர். இவர்களில் ஈரானைச் சேர்ந்த பஹாவுல்லாஹ், இந்தியாவில் உள்ள காதியானைச் சேர்ந்த மிர்சா குலாம் அஹ்மத், மோர்மோன்களின் தலைவரான ஜோசப் ஸ்மித் ஆகியோரும் அடங்குவர்.

இவர்கள் யாருமே இறைவன் மட்டுமே வணக்கத்திற்கும், துதிப்பிற்கும் உரியவர் என்ற இறைத்தூதர்களின் முதல் செய்தியைச் சொல்லவில்லை. ஆனால் Dr. ரஷாத் கலீபா இன்றைய உலகம் இறைவனுக்கு இணைவைத்துக் கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்தி மக்களை தம்மைப்படைத்த இறைவனை மட்டுமே

வணங்கும்படியும் துதிக்கும் படியும் ஏவினார்.

மேற்குறிப்பிட்டவர்களில் யாருமே தாங்கள் இறைத்தூதர்கள் என்பதற்கான தெளிவான ஆதாரங்களைக் கொடுக்க வில்லை . ஒரு இறைத் தூதர், அவர் இறைத் தூதர்தான்-என்பதற்கான ஆதாரங்களை மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு இறைத்தூதரும் இறைவனால் அருளப்பட்ட மறுக்க முடியாத ஆதாரங்களைக் காட்டுவார்கள். அந்த ஆதாரங்கள் அவர் இறைச் செய்தியைப் பெற்று வந்தவர்தான் என்பதற்கான நிரூபணமாக அமையும். மூஸா நபிதன் கைத்தடியை வீசியபோது அது பாம்பாக மாறியது, ஈஸா நபி இறை அனுமதிகொண்டு குஷ்டரோகி களைக்குணப்படுத்தினார். இறந்தவர்களை உயிர்ப்பித்தார். ஸாலிஹ் நபியின் ஆதாரம் ஒரு புகழ்பெற்ற ஒட்டகம். இப்ராஹிம் நபி நெருப்பைத் தீங்கு ஏற்படாமல் கடந்தார், முஹம்மத் நபிக்கு இந்தக் குர்ஆன் மட்டுமே ஆதாரமாக இருந்தது.

(Dr. Rashad Khaleefa) Dr.ரஷாத் கலீஃபாவுக்கும் குர்ஆனில் இறைவனால் அமைக்கப்பட்ட '19' என்ற எண்ணின் அடிப்படையில் அமைந்த அற்புதத்தை வெளிப்படுத்துவதே அவர் தூதுத்துவத் திற்கான ஆதாரமாக இருக்கிறது. 19'ஐப் பற்றிக் குறிப்பிடும் அத்தியாத்தில் (74:35) இறைவனே இதை ஒரு மிகப்பெரிய அற்புதம் என வர்ணிக்கிறார். இந்த ரகசியக் குறியீட்டினை வெளிப்படுத்திய D r . ரஷாத் கலீபாவின் பெயரும் குர்ஆனில் ரகசியக் குறியீட்டு முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. குர் ஆனில் D r . ரஷாத் கலீஃபாவின் முதல் பெயரான 'ரஷாத்' என்ற வார்த்தையின் மூலச்சொல் குர் ஆன் முழுவதும் 19' முறை இடம் பெற்றுள்ளது. இறைவனின் அனுமதி யின்றி தூதர்கள் எந்த அற்புதத்தையும் கொண்டு வர முடியாது என்று குர்ஆன் நமக்குக் கூறுகிறது. (40:78)

‘19' ஐ தெளிவான ஆதாரமில்லை எனக் கூறுவோர், ஸாலிஹ் நபியின் ஒட்டகத்தை இறை அத்தாட்சியாக இருந்தும் அறுத்து விட்ட கூட்டத்தாரை நினைவுபடுத்தி படிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும் இறைத் தூதர்கள் தங்கள் ஆதாரத்தை அற்புதத்தைக் காட்டும் போது அவர்கள் காட்டும் திசையில் பார்க்க வேண்டும். புறங்காட்டித் திரும்பி நின்று கொண்டு கண்களை மூடிக் கொண்டு நான் எந்த அற்புதத் தையும் காணவில்லை என்ப வர்கள் தங்கள் ஆன்மார்க்களைத் தொலைத்து விட்டவர்கள் ஆவார்கள். 19' என்ற இந்த அற்புதத்தைத் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் இதை நிராகரிப் பவர்கள் நிலை மிகவும் பரிதாபத் திற்குரியது. இறைவன் குர்ஆனில் 19' ஐப் பற்றி 74வது சூராவில் குறிப்பிட்டிருந்தும் அதைப் பொருட்படுத்தாத முஸ்லிம்களின் நிலையை என்னவென்பது?

குர் ஆன் முழுவதிலும் தெளிவான ஆதாரம் என்ற (பய்யினாத்) வார்த்தை 19' முறை இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது. அல்லாஹ் அமைத்த ரகசியக் குறியீட்டின்

விளக்கத்தைஅல்லாஹ்வின்அனுமதி யின்றி ஷைத்தானாலும் வெளிப் படுத்திவிட முடியும் என்று இவர்கள் எண்ணுகிறார்களா என்ன? அவ்வா றென்றால் இறைவனின் வல்லமையைப்பற்றி இவர்கள் என்னதான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்?

தெளிவான ஆதாரங்களை சமர்ப் பித்து இறைவனை மட்டுமே வணங்கும்படி ஏவும் தூதர்களுக்கான மூன்றாவது அளவுகோலாக, அவர்கள் தங்கள் தூதுத்துவத்திற்கென்று எந்தக்கூலியும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் குர்ஆ ன் கூறுகிறது. (26:109), 127, 145, 164, 180, 36:21) Dr. ரஷாத் கலீபா ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பதையும், குர் ஆனில் குளறுபடிகள் செய்தவர்கள் நபித்தோழர்கள் பலர் என்பதையும் தன்னை இறைத்தூதர் என்பதையும் அறிவித்த பின்னரே இந்தச் சமுதாயம் அவரைக் கைவிட்டது. அது வரை அவரை ஏற்று போற்றிக் கொண்டிருந்த இந்த சமுதாயம் அவர் சத்தியத்தை எடுத்துரைத் தவுடன் அவரைக் கண்டனம் செய்ய ஆரம்பித்தது. கூலிவேண்டும் என்று Dr. ரஷாத் கலீபா நினைத்திருந்தால் அவர் பெரும் புகழை தக்கவைத்துக் கொண்டு, பெரும் செல்வத்தையும் அடைந்திருக்க முடியும். சத்தியத்தைக்கூறாமலிருந்தாலே போதும். ஆனால் தூதர் தகளின் கூலி அவர்கள் இறைவனிடத்தில் தான் இருக்கிறது. எனவே இவர்களின் புறக்கணிப்பையும் பொருட் படுத்தாமல் அவர்சத்தியத்தை எடுத்து வைத்தார் என்பதே அவர் கூலிதையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்கான ஆதார மாகவும் உள்ளது.

இவ்விதமாக இறைத் தூதர் களுக்கான எல்லா அளவுகோல்களையும் பூரணமாகப் பூர்த்தி செய்த Dr. ரஷாத் கலிஃபாவின் ஆதாரங்களையும் செய்திகளையும் நம் இதழில் தொடர்ந்து காணலாம், இறைவன் நாடினால், அதற்குள் அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். என்ற ஆர்வம் உள்ளவர்கள் இக்கட்டுரையில் கொடுக் கப்பட்டுள்ள இன்டெர்நெட்டில் உள்ள விலாசத்தை திறந்தால் அனைத்துத் தகவல்களையும் உடனடியாகத் தெரிந்து கொள்ளலாம்.

கூறும்; சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது நிச்சயமாக அசத்தியம் அழியக் கூடியதே! (17:71)

அவர்களின் தூதர்கள் அவர் களிடம் தெளிவான ஆதாரங்களுடன் வந்தார்கள். இறைவன் அவர்களுக்கு அநியாயம் செய்யவில்லை . அவர்கள் தான் தங்கள் ஆத்மாக்களுக்கு அநியாயம் செய்து கொண்டார்கள். (9:70)

# இறைதூதர்கள் - நபிமார்கள் ஓர் ஆய்வு

முஹம்மது உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இல்லை ; ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களில் இறுதியானவருமாக இருக்கிறார் (33:40)

குர்ஆனின் கூற்றுக்கு மாற்றமாக நபியும், தூதரும் ஒன்றே என்று ஷைத்தான் இன்றைய முஸ்லிம்களை ஏமாற்றி வைத்திருக்கிறான். இஸ்லாமிய அறிஞர்கள் எனப்படும் ஆலிம்களின் சொல் சரியானதா? அல்லது, இறைவனின் சொல் சரியானதா? என்று சிந்தனை யாளர்கள் சற்றுக் கவனித்து, சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

## இறைத்தூதர்களான (ரசூல்) நபிமார்கள்

இதற்கு உதாரணமாவது 7:157லும், 7:158லும்காணக் கிடைக்கிறது. இவ் வசனங்களில் இறைவன் முஹம்மத் நபியை 'தூதராகிய (ரசூல்) நபி' என்று சுட்டிக் காட்டுகிறாரே தவிர 'நபியாகிய தூதர்' என்று குறிப்பிடவில்லை. இவ்விரு வார்த்தைகளும் ஒரே அர்த்தமுடையவை அல்ல. இதற்கான காரணமாவது, ஒவ்வொரு இறை தூதரும் நபியாக இருக்கவில்லை என்பதும், 'நபி' என்ற வார்த்தை குறிப்பிடப்பட்ட ரசூலைத் (தூதரை ) விவரித்துக் கூறும் வார்த்தையாகும் என்பதும் ஆகும்.

"தவ்ராத்திலும், இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை அறிந்தவர்கள் இந்தத் தூதராகிய உம்மீ (Gentile Prophet) நபியைப் பின்பற்று வார்கள்." (7:157)

"ஆகவே நீங்கள் அல்லாஹ் வையும் அவருடைய தூதராகிய இந்த உம்மீ நபியையும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவர் அல்லாஹ்வையும் அவருடைய வார்த்தைகளையும் நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் இவரைப் பின்பற்றுங்கள். நீங்கள் நேர் வழியை அடையலாம். 7:158

## மூஸா, தூதராகிய நபி :

19:51ல் மூஸா 'தூதராகிய நபி' என்று விவரிக்கப்படுகிறார் (ரசூலன் நபிய்யன்) 'நபியாகிய தூதர்' என்று விவரிக்கப்படவில்லை . (நபிய்யன் ரசூலன்).

## இஸ்மாயில், தூதராகிய நபி :

19:54ல் இஸ்மாயில் 'தூதராகிய நபி' (ரசூலன் நபிய்யன்) என்றே

விவரிக்கப் படுகிறார். இது மேலும் ஒரு உதாரணமாகும். இந்த உதாரணங் களிலிருந்து இறைவனுடைய ஒவ்வொரு ரசூலும் நபியாக இருக்கவில்லை , ஆனால் ஒவ்வொரு நபியும் இறை தூதராக இருந்திருக்கிறார். என்றும் அறிகின்றோம் எனவே இறைவன் தூதரைத் தெளிவாக விவரித்து கூறும் வார்த்தையாக ரசூல்' என்ற வார்த்தையுடன் 'நபிய்யன்' என்ற வார்த்தையை இணைத்துக் கூறுகிறார். இறைவன் ஒருபோதும் தவறுக்கு இடம்கொடுப்பதில்லை மேலும் அவர் தனது வார்த்தைகளைத் தேர்ந்தெடுப்பதிலும் வரிசைக்கிரமப் படுத்துவதிலும் பிழைகள் ஏற்படுத்துவதில்லை.

இதை விளக்கிக் கூறும் மேலும் சில உதாரணங்களைக் குர்ஆனில் காண்போம்

## மனிதர் தூதராக :

"நான் மனிதன் தான், ஆயினும் தூதர் என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை ." (பஷரன் ரசூலன் 17:93)

கவனிக்கவும் ஒரு மனிதனாகிய தூதர் (பஷரன் ரசூலன்) என்று கூறப்பட்டுள்ளதே தவிர தூதராகிய மனிதர்' (ரசூலன் பஷரன்) என்று கூறப்படவில்லை . இதற்கான காரணமாவது, ஒவ்வொரு மனிதரும் (பஷர்) இறை தூதராக இருக்கவில்லை . ஆனால் இறைவனால் அனுப்பப்ட்ட தூதர்கள் (ரசூல்) மனிதர்களாகவும் இருந்திருக்கின்றனர். மலக்குகளும் தூதராக அனுப்பப் பட்டிருக்கின்றனர். 17:94 லும் இதே வார்த்தைக்கு இதே விவரம் கூறப்படுவதை அறியலாம்.

## மலக்கு தூதராக :

......"நாம் வானத்திலிருந்து ஒரு மலக்கை தூதராக அனுப்பியிருப்போம்." (மலக்கன் ரசூலன் 17:95)

இங்கு 'மலக்கு தூதராக' (மலக்கன் ரசூலன்) என்றுள்ளதே தவிர, தூதரை மலக்காக (ரசூலன் மலக்கன்) என்று குறிப்பிடவில்லை . இதன் காரணமாவது, இறைவனால் செய்தி கொடுத்து அனுப்பப்படும். ஒவ்வொரு மலக்கும் தூதராக இருக்கிறார். ஆனால் ஒவ்வொரு தூதர்களும் மலக்குகளாக இருக்கவில்லை .

## சத்தியவான் நபி :

19:41 ல் இறைவன் இப்ராஹிம் நபியை சத்தியவான் நபி (சித்தீக்கன் நபிய்யன்) என்று விவரிக்கிறாரே தவிர, நபியாகிய சத்தியவான் (நபிய்யன் சித்தீக்கன்) என்று குறிப்பிடவில்லை. இதன் காரணமாவது ஒவ்வொரு நபியும் சத்தியவானாக இருந்த போதிலும் ஒவ்வொரு சத்தியவானும் நபியாக இருக்கவில்லை , என்பதேயாகும். இறைவன் 'நபியாகிய சத்தியவான்' (நபிய்யன் சித்தீக்கன்) என்று கூறியிருப்பின் ஒவ்வொரு சத்தியவானும் நபியாக இருக்கிறார் என்றும் ஒவ்வொரு நபியும் சத்தியவானாக இல்லை என்றும் பெரும்பிழை நேரிட்டிருக்கும்.

19:56 ல், இறைவன் இத்ரீஸ் நபியை இதே வழியில், சத்தியவானாகிய (சித்தீக்கன் நபிய்யன்) என்றே குறிப்பிடுகிறார். குர்ஆன் முழுமையும் இறைவன் இதே முறையில் விவரிக்கிறாரே தவிர, வேறெந்த முறையிலும், விவரிக்கவில்லை. இறைவன் ஒருபோதும் ஒரு நபியை 'நபியாகிய தூதர்' (நபிய்யன் ரசூலன்) என்றோ நபியாகிய சத்தியவான் (நபிய்யன் சித்திக்கன்) என்றோ குறிப்பிடவில்லை.

## தூதர் நபியாக இல்லை.

இவ்வாறாக குர் ஆனில் மிக உறுதியாக நபி வேறு ரசூல் வேறு என்பதற்கான ஆதாரங்கள் குறிப்பிடப் படுகிறது. மேலும் உமக்கு முன் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதருடையவும், நபியுடையவும் விருப்பத்தில் ஷைத்தான் குழப்பத்தை உண்டுபண்ண முயற்ச்சிக் காது இருக்கவில்லை. ஷைத்தான் உண்டுபண்ணிய தப்பெண்ணத்தை அல்லாஹ் நீக்கிய பின்னர் தன்னுடைய வசனங்களை அல்லாஹ் ஸ்திரப்படுத்தி விடுகிறார். அல்லாஹ் யாவையும் நன்கறிந்தவரும் ஞானமுடையவரு மாயிருக்கிறார். 22:52

நபியும் தூதரும் ஒரே கருத்துடைய சொற்கள் எனில் "தூதருடையவும் நபியுடையவும்" என்று இறைவன் ஏன் குறிப்பிட வேண்டும்? எனவே தூதர் என்பவர் இறைவனால் தூது கொடுத்து அனுப்பப்பட்ட அனைவரையும் குறிக்கும் என்றும், நபி என்பவர் வேதம் கொடுத்து அனுப்பப்பட்டவர்களை மட்டும் குறிக்கும் என்றும் நாம் அறிந்து கொள்கிறோம்.

(பார்க்க 3:81, 2:213)

★ ★ ★ ★

## (அப்ஜத்) எண் மதிப்பு என்றால் என்ன?

14 நூற்றாண்டுகளுக்கு முன் குர்ஆன் அருளப்பட்டபோது இன்று நாம் பயன்படுத்தும் எண்கள் புழகத்தில் இல்லை . அரபிக், ஹீப்ரு, அராமிக், தமிழ் மற்றும் கிரேக்க எழுத்துக்கள் எண்களுக்கு பதிலாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையே அதன் எண் மதிப்பாகும். அரபி எழுத்துக்களுக்குரிய எண் மதிப்புகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | ا 1 |
| ي 10 | ط 9 | ح 8 | ز 7 | و 6 | ه 5 | د 4 | ج 3 | ب 2 |
| ق 100 | ص 90 | ف 80 | ع 70 | س 60 | ن 50 | م 40 | ل 30 | ك 20 |
| غ 1000 | ظ 900 | ض 800 | ذ 700 | خ 600 | ث 500 | ت 400 | ش 300 | ر 200 |

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

إِنَّ الَّذِيْنَ كَفَرُوْا سَوَآءٌ عَلَيْهِمْ ءَاَنْذَرْتَهُمْ اَمْ لَمْ تُنْذِرْ هُمْ لَا يُؤْمِنُوْنَ

خَتَمَ اللّٰهُ عَلَىٰ قُلُوْبِهِمْ وَعَلٰى سَمْعِهِمْ وَعَلَىٰٓ اَبْصَارِ هِمْ غِشَاوَةٌ وَّلَهُمْ عَذَابٌ عَظِيْمٌ

وَمِنَ النَّاسِ مَنْ يَّقُوْلُ اٰمَنَّا بِاللّٰهِ وَبِالْيَوْمِ الْاٰخِرِ وَمَا هُمْ بِمُؤْمِنِيْنَ

يُخٰدِعُوْنَ اللّٰهَ وَالَّذِيْنَ اٰمَنُوْا وَمَا يَخْدَعُوْنَ اِلَّآ اَنْفُسَهُمْ وَمَا يَشْعُرُوْنَ

## Sura 2: The Heifet (Al-Baqarah)

*(2) The Disbelievers*

6. As for those Who disbelieve, it is the same for them; whther you warn them, or not warn them,they cannot believe.*

**7. God** seals their minds and their hearing, and their eyes are veiled. They have incurred severe retribution.

*(3) The Hypocrites*

8. Then there are those who say, "We believe in **God** and the Last Day," while they are not believers.

9. In trying to deceive **God** and those who believe, they only deceive themselves without perceiving.

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

<u>(2) நம்பமறுப்பவர்கள்</u>

6. நம்பமறுப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அது சமமேயாகும்; நீர் அவர்களை எச்சரித்தாலும், அல்லது அவர்களை எச்சரிக்காவிட்டாலும், அவர்களால் நம்பிக்கை கொள்ள இயலாது.

7. அவர்களுடைய மனங்களையும் அவர்களுடைய செவிப்புலனையும் கடவுள் முத்திரையிட்டு விடுகின்றார், மேலும் அவர்களுடைய கண்கள் திரையிடப்பட்டுள்ளன. அவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

<u>(3) நயவஞ்சகர்கள்</u>

8. அடுத்து அவர்கள் நம்பிக்கையாளர்களாக இல்லாத அதே சமயம், நாங்கள் கடவுள் மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்கின்றோம், என்று கூறுபவர்களும் உள்ளனர்.

9. கடவுள்-ஐயும் நம்பிக்கை கொண்டவர்களையும் ஏமாற்றும் முயற்சியில், அவர்கள் உணர்ந்து கொள்ளாமல் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கின்றனர்.

فِىْ قُلُوْبِهِمْ مَّرَضٌۙ فَزَادَهُمُ اللّٰهُ مَرَضًا ۚ وَلَهُمْ
عَذَابٌ اَلِيْمٌۢ بِمَا كَانُوْا يَكْذِبُوْنَ

10. In their minds there is a disease. Consequently, God augments their disease. They have incurred a painful retribution for their lying.

10. அவர்களுடைய மனங்களில் ஒரு நோய் உள்ளது. அதன் விளைவாக, கடவுள்- அவர்களுடைய நோயை அதிகரிக்கின்றார். அவர்களுடைய பொய்க் கூற்றின் காரணத்தால், அவர்கள் வலி மிகுந்ததொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டனர்.

وَاِذَا قِيْلَ لَهُمْ لَا تُفْسِدُوْا فِى الْاَرْضِۙ قَالُوْٓا اِنَّمَا
نَحْنُ مُصْلِحُوْنَ

11. When they are told, "Do not commit evil, "they say, "But we are righteous!"

11. தீமை புரியாதீர்கள், என அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் கூறுகின்றனர், ஆனால் நாங்கள் நன்னெறியாளர்களாக இருக்கின்றோம்!

اَلَآ اِنَّهُمْ هُمُ الْمُفْسِدُوْنَ وَلٰـكِنْ لَّا يَشْعُرُوْنَ

12. In fact, they are evildoers, but they do not perceive.

12. உண்மையில், அவர்கள் தீமைபுரிபவர்களாக உள்ளனர், ஆனால் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

وَاِذَا قِيْلَ لَهُمْ اٰمِنُوْا كَمَآ اٰمَنَ النَّاسُ قَالُوْٓا اَنُؤْمِنُ
كَمَآ اٰمَنَ السُّفَهَآءُ ؕ اَلَآ اِنَّهُمْ هُمُ السُّفَهَآءُ وَلٰـكِنْ
لَّا يَعْلَمُوْنَ

13. When they are told, "Believe like the people who believed," they say, "Shall we believe like the fools who believed? " In fact, it is they who are fools, but they do not know.

13. நம்பிக்கை கொண்ட மக்களைப்போல் நம்பிக்கை கொள்ளுங்கள், என அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் கூறுகின்றனர், மூடர்கள் நம்பிக்கை கொண்டது போல நாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமா? மெய்யாகவே, அவர்கள்தான் மூடர்களாக இருக்கின்றனர், ஆனால் அவர்கள் தெரிந்து கொள்வதில்லை.

وَاِذَا لَقُوا الَّذِيْنَ اٰمَنُوْا قَالُوْٓا اٰمَنَّا ۚ وَاِذَا خَلَوْا اِلٰى
شَيٰطِيْنِهِمْ ۙ قَالُوْٓا اِنَّا مَعَكُمْ ۙ اِنَّمَا نَحْنُ مُسْتَهْزِءُوْنَ

14. When they meet the believers, they say, "We believe," but when alone with their devils, they say, "We are with you; we were only mocking."

14. நம்பிக்கையாளர்களை அவர்கள் சந்திக்கும் பொழுது, அவர்கள் கூறுகின்றனர், நாங்கள் நம்புகின்றோம், ஆனால் தங்களுடைய சாத்தான்களுடன் தனித்திருக்கும் பொழுது, அவர்கள் கூறுகின்றனர், நாங்கள் உங்களுடனேயே இருக்கின்றோம்; நாங்கள் கேலி தான் செய்து கொண்டிருந்தோம்.

# Sura 1: The Key Al- Fãtehah
# Foot Note :

*1:1 The first verse in the Quran represents the foundation upon which a superhuman 19-based mathematical miracle is built. This important statement consists of 19 Arabic letters, and every word in it occurs in the whole Quran in multiples of 19 (see Appendices 1 & 29 for the details).

*1:1-7 Sura 1 is God's gift to us to establish contact with Him through the daily Contact Prayers. This fact is supported by an earth-shattering, simple-to-understand-but-impossible-to-imitate mathematical composition that challenges the greatest mathematicians on earth, and stumps them; it is far beyond human capabilities:

(1) The sura number, followed by the numbers of verses, next to each other, give 1 1 2 3 4 5 6 7. This number is a multiple of 19.

(2) If we substitute the number of letters per verse in place of verse numbers, we get 1 19 17 12 11 19 18 43. This number is also a multiple of 19.

(3) If we insert the total gematrical value of every verse, we get 1 19 786 17 581 12 618 11 241 19 836 18 1072 43 6009. This number is a multiple of 19.

(4) The number shown above includes all parameters of Sura 1, and consists of 38 digits (19x2).

(5) It is noteworthy that this 38-digit number is still divisible by 19 when we write its components backwards, from right to left, as practiced by the Arabs. Thus, 6009 43 1072 18 836 19 241 11 618 12 581 17 786 19 1 is also a multiple of 19.

(6) The mathematical representations mentioned above participate in numerous extraordinary mathematical phenomena to confirm all details of the five daily Contact Prayers (Appendix 15).

| Verse # | No of Letters | Gematrical Value |
|---|---|---|
| 1 | 19 | 786 |
| 2 | 17 | 581 |
| 3 | 12 | 618 |
| 4 | 11 | 241 |
| 5 | 19 | 836 |
| 6 | 18 | 1072 |
| 7 | 43 | 6009 |
| Totals | 139 | 10143 |

(7) Many more astounding phenomena are given in Appendix One. Thus, the reader is handed, at the outset, tangible proof that this is God's message to the world.



# சென்ற இதழில் வெளிவந்த முதல் அத்தியாயம் அல் பாத்திஹா (திறவுகோல்) பின் குறிப்பு

*1:1 அல் குர்ஆனின் முதல் வசனம் 19ன் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள மனித சக்திக்கு அப்பாற்பட்ட கணித அற்புதத்தின் அஸ்திவாரமாகத் திகழ்கின்றது. இந்த முக்கியமான வாசகம் 19 அரபி எழுத்துகள் கொண்டதாக அமைந்துள்ளது, மேலும் இதில் இடம் பெறும் ஒவ்வொரு வார்த்தையும் முழுக்குர்ஆனிலும் 19ன் பெருக்குத் தொகைகளிலேயே இடம் பெற்றுள்ளது (விபரங்களுக்கு பின் இணைப்புகள் 1 மற்றும் 29ஐப் பார்க்கவும்).

*1:1–7 சூரா 1, அன்றாடத் தொடர்புத் தொழுகைகளின் மூலம் கடவுளுடனான நமது தொடர்பை நிலைப் படுத்திக் கொள்ள கடவுள் நமக்களித்துள்ள வரமாக உள்ளது. உலகின் மாபெரும் கணித வல்லுநர்களை சவாலுக்கழைத்து அவர்களைத் திகைக்கச் செய்யும், உலகை கலங்கடிக்கக்கூடிய, எளிதில் புரியவல்ல ஆனால் ஜோடிக்க இயலாத கணிதக் கட்டமைப்பைக் கொண்டு இவ்வுண்மை உறுதி செய்யப்படுகின்றது; இது மனிதத் திறமைகளுக் கெல்லாம் மிகவும் அப்பாற்பட்டது:

(1) இந்த சூரா எண்ணையும், அதன் பின் வசனங்களின் எண்களையும் அருகருகே அமைத்தால் கிடைப்பது 1 1 2 3 4 5 6 7 இவ்வெண் 19ன் பெருக்குத் தொகையாகும்.

(2) இதில் ஒவ்வொரு வசன எண்களுக்குப் பகரமாக அவ்வசனத்தில் இடம் பெறும் எழுத்துகளின் எண்ணிக்கையை மாற்றி அமைத்தால் நமக்கு கிடைப்பது 1 19 17 12 11 19 18 43 இவ்வெண்ணும் 19ன் பெருக்குத் தொகையாகும்.

(3) இதில் ஒவ்வொரு வசனத்தில் மொத்த எண் மதிப்பையும் நாம் நுழைத்தால் நமக்குக் கிடைப்பது, 1 19 786 17 581 12 618 11 241 19 836 18 1072 43 6009 இவ்வெண் 19 பெருக்குத் தொகையாகும்.

| வசனம் # | எழுத்துகளின் எண்ணிக்கை | எழுத்தெண் மதிப்பு |
|---|---|---|
| 1 | 19 | 786 |
| 2 | 17 | 581 |
| 3 | 12 | 618 |
| 4 | 11 | 241 |
| 5 | 19 | 836 |
| 6 | 18 | 1072 |
| 7 | 43 | 6009 |
| கூட்டுத்தொகைகள் | 139 | 10143 |

(4) மேலே காட்டப்பட்டுள்ள எண் சூரா 1ன் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது, மேலும் 38 (19x2) இலக்கங்கள் கொண்டதாக உள்ளது.

(5) இலக்கங்கள் 38 கொண்ட இந்த எண்ணின் அங்கங்களை அரபியர்களின் வழக்கப்படி வலமிருந்து இடமாக எழுதினால் நமக்கு கிடைக்கும் எண்ணும் 19ன் பெருக்குத் தொகையாகும். இவ்விதமாக, 6009 43 1072 18 836 19 241 11 618 12 581 17 786 19 1 என்ற எண்ணும் 19ன் பெருக்குத் தொகையாக இருப்பது கவனிக்கத் தக்கது.

(6) மேலே விவரிக்கப்பட்ட கணித அமைப்புகள் அன்றாட ஐவேளை தொடர்பு தொழுகைகளின் அம்சங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்துகின்ற, எண்ணற்ற அசாதாரணக் கணிதக்கட்டமைப்புகளிலும் பங்கு பெறுகின்றன (பின்இணைப்பு15).

(7) வியப்பூட்டும் அற்புதங்களில் இன்னும் ஏராளமானவை பின் இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விதமாக, குர்ஆனுக்குள் நுழையும்போதே, அதன் வாசகருக்கு, இது உலகத்திற்குரிய கடவுளின் தூதுச் செய்திதான் என்பதற்கான கண்கூடான ஆதாரங்கள் தரப்படுகின்றன.

*2:1 These initials remained a divinely guarded secret for 1400 years. Now we recognize them as a major component of the Quran's extraordinary mathematical code (see Appendices 1, 2, 24, and 26). The meaning of A.L.M. is pointed out in Verse 2: "This scripture is infallible." This is incontrovertibly proven by the fact that the frequencies of occurrence of these three initials in this sura are 4502, 3202, and 2195, respectively. The sum of these numbers is 9899, or 19x521. Thus, these most frequent letters of the Arabic language are mathematically placed according to a super-human pattern. These same initials also prefix Suras 3, 29, 30, 31, and 32, and their frequencies of occurrence add up to multiples of 19 in each one of these suras.*

**2:3 Since the Contact Prayers are decreed five times a day, they constitute the prime source of nourishment for our souls. Along with all other practices in Submission, the Contact Prayers were originally revealed through Abraham (21:73, 22:78). Although these five daily prayers were practiced before the revelation of the Quran, each Contact Prayer is specifically mentioned in the Quran (24:58, 11:114, 17:78, & 2:238). Appendices 1 & 15 provide physical evidence supporting <u>all</u> the details of the Contact Prayers, including the number of units (Rak'aas) and the numbers of bowings, prostrations, and Tashahhuds in each prayer.*

***2:3 When God uses the plural tense, this indicates that other entities, usually the angels, are involved. When God spoke to Moses, the singular form was used (20:12-14). See Appendix 10.*

**2:4 Despite severe distortions that afflicted the previous scriptures, God's truth can still be found in them. Both the Old Testament and the New Testament still advocate absolute devotion to God ALONE (Deuteronomy 6:4-5, Mark 12:29-30). All distortions are easily detectable.*

**2:6-7 Those who make a decision to reject God are helped in that direction; they are prevented by God from seeing any proof or guidance for as long as they maintain such a decision. The consequences of such a disastrous decision are spelled out in Verse 7.*

*2:1 இந்தத் துவக்க எழுத்துகள் 1400 வருடங்களாக தெய்வீகமாகப் பாதுகாக்கப்பட்ட ஓர் இரகசியமாக இருந்து வந்துள்ளது. இப்போது நாம் அவற்றைக் குர்ஆனின் அசாதாரணக் கணிதக் குறியீட்டின் ஒரு முக்கிய அங்கம் என அடையாளம் கண்டு கொள்கின்றோம் (பார்க்க பின் இணைப்பு 1, 2, 24 மற்றும் 26). அ.ல.ம. என்பதன் அர்த்தம் வசனம் 2ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: "இந்த வேதம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது." இந்த சூராவில் இம்மூன்று துவக்க எழுத்துகளும் இடம் பெறும் எண்ணிக்கைகள் முறையே 4502, 3202, மற்றும் 2195 எனும் உண்மையின் மூலம் இது தர்க்கத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த எண்களின் கூட்டுத்தொகை 9899 அல்லது 19x521. இவ்விதமாக, அரபி மொழியில் மிகவும் அடிக்கடி இடம் பெறுகின்ற இந்த எழுத்துகள் மானுட சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு விதமான கணித ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன. இதே இந்த துவக்க எழுத்துகள் 3, 29, 30, 31 மற்றும் 32 ஆகிய சூராக்களிலும் முதலில் இடம் பெறுகின்றன, மேலும் அவை இடம் பெறும் முறைகள் கூட்டப்பட்டால் இந்த ஒவ்வொரு சூராக்களிலும் அவை 19ன் பெருக்குத் தொகையாகவே வருகின்றது.*

**2:3 தொடர்புத் தொழுகைகள் ஒரு நாளுக்கு ஐந்து வேளைகள் விதிக்கப்பட்டுள்ளதனால், அவை நம் ஆத்மாக்களின் ஊட்டத்திற்கு முதன்மையான மூலாதாரமாக அமைகின்றன. சரணடைதலில் மற்ற அனைத்து அநுஷ்டானங்களுடன் கூடவே, தொடர்புத் தொழுகைகளும் முதன் முதலில் ஆப்ரஹாம் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டன (21:73, 22:78). இந்த ஐந்து அன்றாடத் தொழுகைகள் குர்ஆனின் வெளிப்பாட்டிற்கு முன்னரே அநுஷ்டானத்தில் இருந்து வந்த போதிலும், ஒவ்வொரு தொடர்புத் தொழுகையும் இக்குர்ஆனில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது (24:58, 11:114, 17:78, & 2:238). தொடர்புத் தொழுகைகளின் ஒவ்வொரு தொழுகைக்குமான தொகுதிகளின் (ரக அத்துகள்) எண்ணிக்கைகள், குனிதல், சிரம் பணிதல், மற்றும் தஷஹ்ஹுத்களின் எண்ணிக்கைகள் உட்பட <u>அனைத்து</u> அம்சங்களுக்கும் ஆதாரமளிக்கின்ற கண்கூடான சான்றுகளை பின் இணைப்புகள் 1 &15 வழங்குகின்றன.*

***2:3 கடவுள் பன்மைப் பதத்தைப் பயன்படுத்தும் பொழுது, மற்ற நபர்கள், வழமையாக வானவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. மோஸஸிடம் கடவுள் பேசிய போது, ஒருமை வடிவமே பயன்படுத்தப்பட்டது (20:12–14) பார்க்க பின் இணைப்பு 10.*

**2:4 முந்திய வேதங்களுக்கு ஏற்பட்டு விட்ட கடும் சிதைவுகளுக்குப் பின்னரும், கடவுளின் சத்தியம் அவற்றில் இன்னமும் காணப்படக்கூடியதாகவே உள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டும் இன்னமும் கடவுளுக்கு மட்டுமேயான பரிபூரண அர்ப்பணித்தலை ஆதரிக்கின்றன (உபாகமம் 6: 4–5, மாற்கு 12:29–30). எல்லாச் சிதைவுகளும் எளிதில் கண்டுபிடித்து விடக் கூடியவையாகவே உள்ளன.*

**2:6–7 கடவுளை ஏற்றுக்கொள்ள மறுப்பதெனத் தீர்மானித்து விடுபவர்கள் அத்திசையிலேயே ஒத்தாசை செய்யப்படுகின்றனர்; இத்தகையதொரு தீர்மானத்தில் அவர்கள் நிலைத்திருக்கும் காலம் வரை எந்தச் சான்றையோ அல்லது வழிகாட்டலையோ காண்பதிலிருந்து கடவுளால் அவர்கள் தடுக்கப்பட்டு விடுகின்றனர். வசனம் 7ல் பெரு நாசமுண்டாக்குகின்ற இத்தகையதொரு தீர்மானத்தின் பின்விளைவுகள் வார்த்தைகளால் எடுத்துக் கூறப்படுகின்றன.*

# சரியான ஷஹாதத்

## லாஇலாஹ இல்லல்லாஹ்

இறைவன் குர்ஆனில், சரியான ஷஹாதத்தை (நம்பிக்கைக்குச் சாட்சியம் பகர்தல்) அவரே கூறுவதாகக் குறிப்பிடுகிறார்.

"அவரைத் தவிர வேறுயாரும் கடவுள் இல்லை என்று இறைவன் சாட்சி பகர்கிறார். இவ்வாறே வானவர்களும் அறிவுடையோரும் சாட்சி பகர்கின்றனர். உண்மையாகவும் நீதமாகவும் அவரே பூரணமான இறைவன் அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை . அவர் ஆற்றல் மிக்கவர் ஞானம் நிறைந்தவர்." (3:18)

شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا هُوَۙ وَالْمَلٰٓٮِٕكَةُ وَاُولُوا الْعِلْمِ قَآٮِٕمًا بِالْقِسْطِ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

முஹம்மத் ரசூலுல்லாஹ் என்பதை இணைக்காமல், லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது மட்டுமே சரியான ஷாஹாதத் (சாட்சியம்) என்ற இந்தக் (3:18) குர்ஆன் கூறும் உண்மையை இன்றைய சீர்கெட்டுப் போன முஸ்லிம் அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

முஹம்மத் நபி இறைவனின் தூதரும், இறுதி நபியும் ஆவார். குர்ஆன் அவர் மூலமே அருளப்பட்டது. குர் ஆனில் உள்ள உண்மைகளை நிலைநாட்டுவதற்கு தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.இணைவைப்பவர்களிடம் இறைவனின் சொல்லான குர் ஆனை மட்டும் உயர்த்தி பிடித்தார். அதில் கூறப்பட்டுள்ள கட்டளைகளை உயிரோடு இருந்த வரை பின்பற்றினார் இறந்த பிறகு இறைவனிடம் சென்றடைந்தார்.

இறைவனைக் குறிப்பிடும் போதும் நினைவு கூறும் போதும் அவருடன் முஹம்மதையோ வேறு அவ்லியாக்கள் எனும் இறை நேசர்களையோ மற்ற தூதர்களையோ நபிமார்களையோ சேர்த்துக் குறிப்பிடுவது மறுமையை நம்பாததன் அடையாளம் என்று குர்ஆன் கூறுகிறது.

"இறைவன் மட்டும் தனித்தவராக நினைவு கூறப்பட்டால் மறுமையை நம்பாதவர்களின் உள்ளங்கள் சுருங்கி

விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்களும் சேர்த்து நினைவு கூறப்பட்டால் அவர்கள் திருப்தி அடைந்து விடுகிறார்கள். (39:45)

யார் இறைவனையும் அவர் தூதர்களையும் நம்புகிறாரோ அவர், தூதர் மூலம் வந்த இறைகட்டளைகளைப் பின்பற்ற வேண்டும் லா இயாஹ இல்லல்லாஹ் முஹம்மதூர் ரசூலுல்லாஹ் என்று கூறும்படி இறைவன் குர் ஆனில் எங்கும் காணப்படவில்லை.

முஹம்மத் நபி ஒரு போதும் இத்தகைய சாட்சியைக் கூறியிருக்க முடியாது, கூறவும் இல்லை . நபியின் காலத்தில் அவரை நம்பி, அவருக்கு உதவி புரிந்த நல்ல நம்பிக்கையாளர்கள் ஒரு போதும் இத்தகைய சாட்சியைக் கூறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதில்லை. இதற்கு மாறாக, குர்ஆனில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே ஒரு சாரார் முஹம்மத் ரசூலுல்லாஹ் என்று சாட்சி கூறுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அத்தகைய சாட்சியைக் கூறுபவர்கள் நயவஞ்சகர்கள் என்றே அவ்வசனம் கூறுகிறது.

"நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்தால் நிச்சயமாக நீர் இறைவனின் தூதராக இருக்கின்றீர் என்று நாங்கள் சாட்சி கூறுகிறோம். என்று கூறுகிறார்கள். இறைவனுக்கு நீர் அவரின் தூதர் என்பது நன்கு தெரியும். மேலும் இந்த நயவஞ்சகர்கள் பொய்யர்கள் என்றே இறைவன் சாட்சி கூறுகிறார். (63:1)

எந்த ஒரு இறைத்தூதரும் இறைவனைக்குறிப்பிடும்போது தன் பெயரையும் குறிப்பிடவேண்டும் என்று கூறமாட்டார். இறைவனின் கட்டளைகளுக்கு மாறாக இறைவனைப் புகழும் போது தன்னையும் துதிக்கும்படி எந்த இறைத்தூதரும் எவரிடமும் கூறமாட்டார்.

இறைவன் வேதத்தையும் ஞானத்தையும், நபித்துவத்தையும் அருள் செய்த ஒரு மனிதர், ஒரு போதும் இறைவனுடன் எனக்கும் அடியாராகி விடுங்கள் என்று கூறமாட்டார். மாறாக நீங்கள் பிரசாரம் செய்யும் வேதத்தின் படியும், அதில் நீங்கள் படித்துக் கொள்ளும் பாடங்களின் படியும், இறைவனுக்கு மட்டுமே முற்றிலும் அர்ப்பணித்தவர்களாக ஆகிவிடுங்கள் என்றே அவர் கூறுவார். (3:79)

மேலும் முஸ்லிம்களின் இந்தத் தவறான ஷஹாதத் குர்ஆனின் பலதெளிவான, நேரடியான வசனங்களுக்கு முரணானதாகும். தூதர்கள் அனைவரையும் நம்பி (அவர்கள் கொண்டு வரும் தூது செய்திகளை ஏற்றுக் கொண்டு) அவர்களுக்கிடையில் நாம் எந்தப்பேதமும்பாராட்டாமல் இருக்க வேண்டும் என்றும். குறிப்பாக இவ்விஷயத்தில் கட்டுப்படவேண்டும் (மாறுசெய்யக்கூடாது) என்றும் இறைவன் 2:285 ல் நமக்குப் போதிக்கிறார்.

முஹம்மத் நபியின் உம்மத்து (சமுதாயம்) ஆக இருப்பதே, பாக்கியம் என்று ஹதீஸ்கள் காட்டும் மாயத் தோற்றங்களை நம்பாமல், "நாங்கள் இறைவனை நம்புகிறோம், எங்களுக்கு இறக்கப்பட்டதை நம்புகிறோம்,

இப்றாஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக், யாக்கூபு மற்றும் சந்ததியர், மேலும் மூஸாவுக்கும், ஈசாவுக்கும், இறக்கப் பட்டதையும் அனைத்து நபிமார்களுக்குக் இறக்கப்பட்டதையும் நாங்கள் நம்பு கிறோம். அவர்களிடையே நாங்கள் எந்த வித பேதமும் பாரட்டமாட்டோம் பிரித்துப் பார்க்க மாட்டோம். இறைவனுக்கு மட்டுமே நாங்கள் அர்ப்பணித்தவர்கள் ஆவோம் என்று கூறும் படி குர்ஆனின் 3:84, 2:136, ஆகிய வசனங்க ளில் இறைவன் நமக்குக் கட்டளையிட, அதற்கு மாறாக முஹம்மத் நபியின் உம்மத்து (சமுதாயம்) நாங்கள் என்று பெருமை பேசி ஷைத்தான்களை நம்பி ஏமாந்து போகும் இந்த முஸ்லிம்களின் நிலை மெய்யாகவே பரிதாபத்திற்குரியது:

'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று அவர்களுக்குக் கூறப்பட்டபோது (இறைவனைத்தவிர, வேறு கடவுள் இல்லை) அவர்கள் கர்வம் கொண்டு புறக்கணித்தனர்.

ஒரு பைத்தியக்காரப் புலவருக் காக, எங்கள் தெய்வங்களை நாங்கள் கைவிட்டு விடுவோமா? என்று அவர்கள் கூறுகிறார்கள்.

உண்மையில் அவர் சத்தியத்தையே கொண்டு வந்தார். மேலும் அவர் ஏனைய . இறைத்தூதர்களையும் மெய்ப்பிக்கிறார். (37:35-37)

ஆனால் இந்த முஸ்லிம்களோ இறைவனின் இத்தகைய தெளிவான போதனைகளுக்கு, கட்டளைகளுக்கு மாறு செய்து ஹதீஸ்கள் என்ற செவிவழிச் செய்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து குர் ஆனை அதன் கருத்துக்களைச் சிதைக்கின்றனர். முஹம்மத் நபியை இறைவனுக்கு இணையாக்குவதற்காக அவர் கொண்டு வந்த குர் ஆனைச் சிதைப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்?

"அற்பக்கிரயத்தைப் பெறுவதற் காகத் தம் கரங்களால் நூலை எழுதிவைத்துக் கொண்டு, பின்னர் அது இறைவனிடமிருந்துதான் வந்தது என்று கூறுபவர்களுக்கு கேடுதான் அவர்கள்
கைகளால் இவ்வாறு (வேதத்தைச் சிதைத்ததற்கு) செய்தற்கும், அவர்கள் ஈட்டிய சம்பாத்தியத்திற்காகவும்
அவர்களுக்குக் கேடுதான்!" (2:79)

நிச்சயமாக எல்லாப்புகழும் இறைவனுக்குரியது, இறைவனுக்கு மட்டுமே உரியது. இறைவனும் அவர் தூதரும் அங்கீகரிக்காத ஒன்றைச் செய்யும்படி பல நூற்றாண்டு காலங்களாக இந்த இஸ்லாமிய அறிஞர்கள் என்று பெயர் பெற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதை உணர்ந்து முஸ்லிம் மக்கள் விழித் தெழுவது எப்போது? இறைவன் நமக்குப் போதுமானவர் அல்லவா?

அவரே ஒரே இறைவன் அவரைத்தவிர வேறுகடவுள் இல்லை. முந்திய வாழ்விலும், மறுமையிலும் அவருக்கே எல்லாப் புகழும் உரித்தானதாகும். தீர்ப்புகள் அனைத்தும் அவரிடமே உள்ளன. அவரிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள். (28:70)

# ஹதீஸ்களின் உண்மைநிலை!

இவை அல்லாஹ்வின் வசனங்களாகும் இவற்றை நாம் உமக்கு உண்மையுடன் ஓதிக்காண்பிக்கிறோம். அல்லாஹ்வுக்கும் அவருடைய வசனங்களுக்கும் பின்னர் இவர்கள் எந்த ஹதீஸைத்தான் நம்பப்போகிறார்கள். (45:6)

இன்றைய முஸ்லிம்கள் என்றழைக்கப்படுவோர் - ஓரிறைக் கொள்கை கொண்ட தங்கள் மார்க்கத்தை அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைத்து விட்டார்கள். இறைவனின் தூய மார்க்கத்தை, முரண்பாடான, அடக்கு முறை, வன்முறை நிறைந்த, அறிவுக்கு ஒவ்வாத, காரணங்கள் தெரியாத கட்டளைகளைக் கொண்டு மாற்றிவிட்ட இஸ்லாமிய அறிஞர்கள் என்றழைக் கப்படுவோரின் போக்கை வெளிப் படுத்துவதும், குர்ஆனுக்கு முரணான, இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் மார்க்க ஆதாரங்கள் அல்ல என்று நிரூபிப்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாம் ஒரு முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம், இறைவன் நமக்கும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் மீட்சிக்கான வழிகளைத் திறந்து விட்டிருக்கிறார்.

சுயசிந்தனையின்றி தங்கள் பெற்றோர்களின் மார்க்கத்தைக் குருட்டுத்தனமாக,பின்பற்றுபவர்கள் இந்த அரிய வாய்ப்பை இழந்து விடுவார்கள்.

இது குர் ஆனின் சகாப்தம், குர்ஆன் மட்டும் என்ற சத்திய மார்க் கத்தின் விடியல் வெளிச்சம்மானது ஹதீஸ், சுன்னத் என்ற இட்டுக்கட்டப்பட்ட ஷைத்தானின் போதனைகளை பின்பற்று பவர்களின் கண்களை உறுத்த ஆரம்பித் துவிட்டது. நாம் ஒரு மறுமலர்ச்சிக்கான காலகட்டத்தில், இறைவனின் மார்க்கம் அதனுடைய தூய்மையான நிலைக்கு மீட்கப்படும் காலகட்டத்தில் வாழ்கிறோம்.

இன்று உலகில் உள்ள எல்லா முஸ்லிம்களும், முஹம்மது அவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட ஹதீதையும், சுன்னத்தையும் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப் படுகிறார்கள். அவர்களுடைய முன்னோர் களின் கூற்றுப்படி குர் ஆனுடன் ஹதீதுகளும் மார்க்கத்தின் அடிப்படை ஆதாரமாக, தீர்ப்புகள் கூறுவதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இவை முஹம்மத் நபி கூறியவை என்றும் அவர் அங்கீகாரம் பெற்றவை என்றும் இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இந்த ஹதீதுகள் முஹம்மது நபி அறியாத ஒன்று என்றும் அவர் இறைவனால் கைப்பற்றப்பட்டு சுமார் 200 வருடங்கள் கழித்து தோன்றியவை என்பதை அவர்களில் பெரும்பாலோர் அறியமாட்டார்கள்.

'என்னிடமிருந்து குர் ஆனைத் தவிர வேறு எதையும் எழுதவேண்டாம். யாரேனும் எழுதியிருந்தால் அவர்

அதை அழித்து விடட்டும்' என்று நபி கூறியதாக ஸஹீஹ் என்று இவர்களே கூறும் ஹதீஸ் ஒன்று அஹ்மது, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய நூல்களில் பதியப் பட்டுள்ளது. இதற்கு முரணாக சில குறிப்பிட்ட கட்டளைகளை எழுதிக் கொள்ள அனுமதித்ததாகவும் ஒரு செய்தியை ஷைத்தான் பதிய வைத்திருக் கிறான். நபியை முன்னுக்குப் பின் முரணாக பேசியவர் போல், இந்த ஹதீஸ்கள் சித்தரிக்கின்றன.

குர்ஆனுடன் கலந்து விடக்கூடும். என்று அஞ்சியே நபி அவ்வாறு தடைசெய்தார்கள், பின்னர் அந்த தடை நீக்கப்பட்டது என்று பொய்யுரைக் கிறார்கள் இந்த ஆலிம்கள் குர்ஆனுடன் கலந்து விடக் கூடும் என்ற அச்சம் குர் ஆன் இறங்கும் வரை அல்லது நபி மரணிக்கும் வரை தானே இருந்திருக்க முடியும்? நபியின் மரணத்திற்குப் பின் பொறுப்பேற்ற அபுபக்கரோ, அவருக்குப் பின் வந்த உமர், உதுமான், அலி, போன்றோர் தங்கள் காலத்தில் நபியின் சொற்கள் என்று கருதப்பட்ட ஹதீஸ்களை தொகுக்கும் முயற்சியில் ஈடுபடல்லையே, என்ற நம் கேள்விக்கு பதில் கூறுவதில்லை.

பின்னர் ஆட்சியைக் கைப்பற்றிய முஆவியா, நபியின் வளர்ப்பு மகனும், எழுத்தருமான ஸைது இப்னுஸாபித்திடம் நபி கூறிய குர் ஆன் அல்லாத செய்திகளைத் கூறும்படியும், அவற்றை எழுதிக் கொடுக்கும்படி கட்டளையிட்ட போது அவர் மறுத்து, நிச்சயமாக நபி, நாங்கள் நபி குறித்த (குர் ஆன் அல்லாத) செய்திகளை எழுதுவதை விட்டும் தடுக்கப்பட்டிருந்தோம் என்று கூறிய, அஹ்மதில் பதியப்பட்ட செய்தியையும் இவர்கள் கண்டு கொள்வதில்லை.

முஆவியா அதை விரும்பினாலும் நபித்தோழர்கள் உயிருடன் இருந்ததால் அவரால் அதைச் முழுமையாக செய்ய முடியவில்லை . அதன்பின் வந்த ஹஸன் ஹுஸைனைக் கொன்ற யஜீதாலும், அதற்குப்பின் வந்த, மர்வான் இப்னு ஹகம் காலத்தில் கூட ஹதீஸ்கள் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை.

ஹதீஸ்களையும் அதாவது நபி கூறியதாகக் கருதப்பட்ட சொற்களையும் மார்க்க ஆதாரமே என்ற கருத்து உருவாக்கம் பெற்றது புகழ்பெற்ற மார்க்கத் தீர்ப்பாளர் ஷாஃபீயின் காலத்தில் தான் (இறப்பு ஹிஜ்ரி 204). அவர்தான் முதலில் ஹதீஸ்களைக் கொண்டு தீர்ப்புகள் அளிக்க ஆரம்பித்தவர்.

ஸஹிஹ் ஸித்தா என்று இவர்களால் அழைக்கப்படும் ஆறு புத்தங்களும் இந்தக் கருத்துருவாக்கம் பெற்று நிலைத்துவிட்ட பின்னரே எழுதப்பட்டன. புகாரி (இறப்பு ஹிஜ்ரி 256) முஸ்லிம் (இறப்பு ஹிஜ்ரி 261) அபூதாவூத் (இறப்பு ஹிஜ்ரி 275) திர்மிதி (இறப்பு ஹிஜ்ரி 279) இப்னுமாஜா (இறப்பு ஹிஜ்ரி 273) மற்றும் நஸஈ (இறப்பி ஹிஜ்ரி 303) ஆகியோர் ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்திலும் வாழ்ந்தவர்களே! அதாவது நபியின் மரணத்திற்குப் பின் 220 முதல் 270 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட செய்திகளே இந்த ஆறு ஹதீஸ்களின்

தொகுப்புகள்.

பழமைவாதிகளான சன்னி பிரிவினரின் ஹதீஸ்களை புதுமை வாதிகளான ஷியா பிரிவினர் ஒப்புக் கொள்வதில்லை ஏனெனில் அவர்கள் தங்களுக்கென்று தனித்த ஹதீஸ் நூல்களை வைத்திருக்கிறார்கள். அவை மூன்று மற்றும் நான்காம் நூற்றாண்டு களில் எழுதப்பட்டவை ஆகும். அவை அல்குலைனி (இறப்பு ஹிஜ்ரி 328) இப்னு பாபுவைஹ் (இறப்பு ஹிஜ்ரி 381) ஜாஃபர் முஹம்மத் அல்தூஸி (இறப்பு ஹிஜ்ரி 411) அல்முர்த்தளா (இறப்பு ஹிஜ்ரி 436) இவை அனைத்தும் அலீ கூறியதாகக் கருதப்பட்டவை.

ஷாஃபியின் கருத்தின் அடிப் படையில் பின்னர் இஜ்மாஉ (அறிஞர்களின் ஒத்த கருத்து) என்று பெயரிடப்பட்டு ஹதீதுகளும் மார்க்க ஆதாரங்களே என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டன. குர்ஆன் விளக்க மில்லாதது, முழுமை யானது அல்ல என்ற அபிப்ராயத்தைத் தெரிவிக்கும் முகமாக ஹதீஸ்களைக் குர்ஆனுக்கு விளக்க மாகவும், இணைப் பாகவும் அன்றைய மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஒவ்வொன்றும் தோன்றுவதற்கு ஒரு காரணமும், அது ஏற்படுத்தும் விளைவுகளும் உண்டு என்பது இறைவனின் இயற்கை விதி. காரணமில்லாமல் காரியங்கள் நடப்பதில்லை, விளைவுகள் ஏற்படுத்தாத காரியங்கள் இல்லை. இது ஹதீஸ்களுக்கும் பொருந்தும். நாம் இங்கே ஹதீஸ்கள் நபியிடம் இருந்து வந்ததல்ல என்பதையும், அவை ஹிஜ்ரி இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் சமுதாயத்தில் நிகழ்ந்த அரசியல் மத சண்டைகளின் விளைவாகவே தோன்றியது என்பதையும் காண்போம். முஹம்மத் நபி விட்டுச் சென்ற குர் ஆனுக்கு ஹதீஸ்கள் முற்றிலும் மாறுபட்ட, வேறு ஒரு போதனையே ஆகும். இது நபியின் கட்டளையை மீறி செய்யப்பட்டது. இருப்பினும் திறமையான முறையில் அவர் மீது இட்டுக்கட்டப்பட்டது.

ஆதாரபூர்வமாக முஹம்மத் நபி விட்டுச் சென்றது அல்குர்ஆன் மட்டுமே ஹதீஸ்கள் நபி பற்றிய உண்மையும், பொய்யும் கலந்த செய்திகளின் தொகுப் பாகும். இது நபியின் கட்டளைக்கு மாற்றமாக உண்டாக்கப் பட்டது என்பது முதல்நான்கு கலீபாக்கள் ஹதீஸ்களை தொகுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பது நமக்குக் காட்டுகிறது. பின்னர் வந்த தலை முறையினர் நபியின் தடையை அலட்சியம் செய்து அவற்றைத் தொகுத்து விட்டனர். ஹதீஸ்களை மார்க்க ஆதாரம் என்றும் கருத ஆரம்பித்தனர். இது குர்ஆனின் வெளிப்படையான பற்பல கட்டளைக்கு முரணானது ஆகும்.

ஹதீஸ்கள் என்ற செவிவழிவந்த செய்திகள் பல்கிப் பெருகியதான் காரணம் ஆரம்ப இஸ்லாமிய சமுதாயத்தில் உண்டான மூன்று பெரும் உள்நாட்டுக் கலகங்களினால் ஏற்பட்ட பிரிவுகளே, இம்மூன்று கலகங்களும் அலீயின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்து முஆவியா ஆட்சிக்காலத்தின் இறுதி வரை நடந்திருக்கின்றன. இக்கலகங்களினால்

அன்றைய முஸ்லிம் சமுதாயம் பல பிரிவுகளாகப் பிரிந்தது. ஆட்சியைக் கைப்பற்ற அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டது. இந்தப் போட்டியின் விளை வாகவே ஹதீஸ்கள் பெருக ஆரம்பித்தது. ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் கொள்கைக்கும் எண்ணங்களுக்கும் ஏற்ப நபியின் பெயரால் ஹதீஸ்களை இட்டுக்கட்டிக் கூற ஆரம்பித்தனர்.

இவை மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை பதியப்பட்டன. நபி இறந்த பின்னர், அவர்தடையை மீறி பல நூற்றாண்டுகள் கழித்து பதியப்பட்ட இச் செய்திகளை எவ்வாறு மார்க்க ஆதாரம் என்று கருதமுடியும்.

தங்கச்சங்கிலித் தொடர் கொண்ட ஹதீஸ் முஅத்தா மாலிக்கில் இடம் பெறும் ஹதீஸே மிகச் சிறிய, உறுதியான அறிவிப்பாளர் தொடர் கொண்ட ஹதீஸ் என்று ஹதீஸ் கலை வல்லுனர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் கூறுவர். இந்த மிகச் சிறிய தொடர் மூன்று தலைமுறைகளைக் கொண்டதாகும் போன வாரம் நடந்த நிகழ்ச்சிகளையே முழுமையாக நினைவில் வைத்துக் கொள்ள இயலாதவன் மனிதன் இத்தகைய பலஹீனமான மனிதர்கள் பல ஆண்டுகள் கழித்து அறிவிக்கும் செய்தி களை உறுதியான மார்க்க ஆதாரம் என்று கருதுவது அறிவுடைமையாகுமா? இவர்கள் தங்கச்சங்கிலி, அறிவிப்பாளர் சங்கிலி என்று கூறும் அனைத்தும் செல்லரித்துப் போன காகிதச் சங்கிலிகளே! அவற்றில் உள்ள கோளாறுகளைப்பின்னர்,இறைவன் நாடினால் விரிவாகக் காண்போம். அவற்றில் ஒன்றை மட்டும் இந்த இதழில் பார்ப்போம்.

ஹதீஸ்களின் அறிவிப்பாளர்களைத் தரம் பிரிப்பதற்காக அவர்களைப் பற்றி கட்டுக்கட்டாக புத்தகங்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் அறிவிப்பாளர் களின் தரத்தை ஆராய் வதாகக் கூறும் இவர்கள், தாங்கள் ஸஹாபி (நபித் தோழர்) என்று கருதும் மனிதர்களின் தரத்தைப் பற்றி ஆராய்வதில்லை. அது இவர்களுக்குத் தெரியாத ஒன்று. ஆனால் என்ன கூறுவார்கள் தெரியுமா? ஸஹா பாக்கள் பொய் கூற மாட்டார்கள் ஏனென்றால் அல்லாஹ் அவர்களைத் திருப்தி கொண்டான் அவர்களும் அல்லாஹ்வை திருப்தி கொண்டார்கள் என்று வசனம் உள்ளது. எனவே நாம் ஸஹாபாக்களை ஆராயத்தேவை இல்லை என்று கூறுவர்.

ஆனால் இவர்களே கற்பனை செய்த ஹதீஸ்களில் நபித்தோழர்கள் பலர் நபி கூறாததை கூறினார்கள் என்று கூறியதற்காக (பித்அத்) நரகம் செல் வார்கள், நபித்தோழர்களாக இருந்தாலும் ஹவ்ளல் கவ்ஸர் எனும் நீர்தடாகத்தை விட்டுத் (இதுவும் கற்பனைதான்) தடுக்கப்படுவார்கள் என்றும் காணப்படுகிறது. இவ்வாறு பற்பல வகைளில் முரண்படுவதே ஹதீஸ்களின் தன்மை. ஆனால் இறைவன் கூறுகிறார் அல்லாஹ் இறக்கிய வேதத்தில் முரண்பாடுகள் இல்லை முரண்பாடுகள் உள்ளது எதுவும் இறைவனிடமிருந்து வந்ததது இல்லை . (4:82)

# நபி இறந்த பின் சுமார் 200 வருடங்கள் கழித்து ஹதீஸ்களின் ஆசிரியரான புகாரியின் வாழ்வில் ஒரு நாள்




*Cartoon by Brother Othman Bin Ali, Malaysiu*

ஆனால் அவர்களில் பெரும்பாலோர் யூகங்களையேயன்றி பின்பற்றவில்லை மேலும் யூகங்கள், உண்மைக்கு மாற்றாக இருக்க இயலாது. நிச்சயமாக இறைவன் அவர்கள் செய்பவற்றையெல்லாம் முற்றிலும் அறிந்தவராக இருக்கிறார். 10:36

# ஷைத்தான் மாபெரும் மனோவசியக்காரன்

மனிதன் தன்னிலும், படைப்பினங்களிலும் காணப்படும் இறைவனின் தெளிவான அத்தாட்சிகளை ஏன் மறுக்கின்றான்? முந்திய சமூகத்தார் அனைவரும் இறைவனால் தங்களுக்கு அனுப்பப்பட்ட அற்புதங்களை ஏன் மறுத்தனர்? உத்திரவாதமிக்க குர்ஆனின் வழிகாட்டல் இருக்கும் போது அதை விடுத்து முஸ்லிம்கள், அனாச்சாரங் களையும், யூகங்களையும், அபிப்பிராயங் களையும், பாரம்பரியச் செய்திகளையும் பின்பற்ற ஏன் விரும்புகின்றனர்?

முஸ்லிம் அறிஞர்கள் மாபெரும் அற்புதமான மறுக்க முடியாத அற்புத கணித கட்டமைப்பு புறக்கணிக்கவும், குறைவு படுத்தவும் ஏன் முனைகின்றனர்?

ஏன் அவர்கள் 'பிஸ்மில்லாஹ்' பத்தொன்பது எழுத்துக்கள் கொண்டது இல்லை , குர்ஆனில் 114 சூராக்கள் இல்லை. என்பது போன்ற முட்டாள் தனமான கூற்றுக்களை உண்மைக்கு மாறாக உதிர்க்கின்றனர்?

இதற்கு விடை : மனிதர்களில் அதிகமானோர் மாபெரும் மனோவசியக் காரனான ஷைத்தானின் மனோவசியத் திற்கு தங்களை உட்படுத்தி கொண்டது தான்.

நம்பிக்கை கொண்டோரின் நெஞ்சங்களில் உள்ள எல்லாச் சந்தேகங்களையும் போக்க நாடிய இறைவன் தனது திட்டப்படி இப்பொழுது இந்த விடையை மேலும் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

ஷைத்தான் (Point of View) கண்ணோட்டமான இறைவன் மட்டும் போதாது என்ற கருத்தை ஏற்று கொண்ட ஆதமின் சந்ததிகளை, மனோவசியம் செய்யும் சக்தியை ஷைத்தானுக்கு இறைவன் தந்திருக்கின்றார். இந்த மனோவசிய சக்தி ஒரு நிபந்தனையின் பேரில் அவனுக்கு கொடுக்கப்பட்டிருக் கின்றது. யாரேனும் இறைவனை மட்டும் வணங்க முடிவெடுத்தால், ஷைத்தானின் மனோவசிய வலையிலிருந்து அவர்கள் மீண்டுவிடுவார்கள். அந்த முடிவெடுக்கும் உரிமை எல்லா சூழ்நிலைகளிலும் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

பெரும்பான்மையான மனிதர்கள், ஷைத்தானுடைய ஆதிக்கத்திலும், கட்டுப் பாட்டிலும் இருப்பதை தேர்ந்தெடுத் திருப்பதில் இருந்து ஷைத்தானின் மனோவசிய வல்லமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஷைத்தான் கூறினான் என் இரட்சகா, நீ என்னை வழிகேட்டில் விட நாடி விட்டதால், நான் இவ்வுலகில் மனிதர்களை மயக்கி அவர்கள் அனை வரையும் வழிகெடுத்து விடுவேன். உமக்கு மட்டுமே அர்ப்பணித்த உம்முடைய ஓர்மையான அடியார்களை தவிர, இறைவன் கூறினார். “இது என்னுடைய

மாற்ற முடியாத சட்டமாகும். என்னுடைய அடியார்கள் மீது உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. வழிகெட்டவர்கள் மட்டுமே உன் ஆதிக்கத்திற்குள் விழுவார்கள்" (15:39-42)

ஷைத்தான் தன்னுடைய முஸ்லிம் சகாக்களுக்கு குர்ஆன் மட்டும் என்றால் ஏற்றுக்கொள்ள கூடாது என்று அறிவுறுத்துகிறான். குர்ஆனில் உள்ள எல்லாவற்றையும் அவர்கள் நம்புவதற்கு (Limits) எல்லைகளை வகுத்து கொள்ளும்படி கூறுகிறான், இறைவனின் அத்தாட்சிகளை மனிதர்கள் மறுக்கும் படி அவர்களை ஏவுகின்றான். இறைவனை மட்டும் வணங்குவதில்லை; குர்ஆன் மட்டும் என்றால் அதை ஏற்றுக் கொள் வதில்லை; என்று முடிவெடுத்த உடனே மாபெரும் மனோவசியக்காரன் மனிதர்களின் மூளையை களவு செய்து சூறையாடி விடுகிறான்.

ஷைத்தான் தன்னைப் பின்பற்று பவர்களை தாங்கள் சரியான வழியில் இருப்பதாக நம்பும்படி செய்து விடுகின்றான்.

"ஒரு கூட்டத்தை இறைவன் நேர்வழியில் செலுத்தினார், மற்றவர்களை அவர் வழிகேட்டில் விட்டு விட்டார். அவர்கள் அல்லாஹ்வை விடுத்து ஷைத்தான்களை தங்கள் பாதுகாவலர் களாக தேர்ந்தெடுத்து கொண்டனர். எனினும் அவர்கள் நேரான வழியில் இருப்பதாகவே எண்ணிக்கொள்கிறார்கள். (7:30)

## ஷைத்தான் எப்படி மனித வர்க்கத்தை மனோவசியப்படுத்துகின்றான்

மனோவசியம் என்பது ஒரு மெய் மறந்த மயக்க நிலையாகும். அப்போதுஉணர்வுகள்மாற்றப்படும், உளவுறுதிகுறையும்யோசனைகளுக்ு செவிசாய்க்கும் தன்மை அதிகமாகும். ஒரு மனிதனை அவன் விருப்பத்திற்குமாறாக மனோவசியம் செய்ய முடியாது. அவன் மனோவசியக்காரனின்யோசனைகளுக்கு கட்டுப்படவேண்டும். மனோவசியக் கலை உடல், மன நோய்களை தீர்க்க உதவு வதற்கும் அதேநேரத்தில் தீயகாரியங்களுக்கும பயன்படுத் தப்படுகிறது.

ஒரு தேர்ந்த மனோவசியக்காரன் தன்னுடைய வாடிக்கையாளரின் நம்பிக் கையை பெறும் திறமை உள்ளவனாகவே இருக்கிறான். விரும்பிய விளைவுகளை உண்டாக்குவதற்கு, தானும் தன்னுடைய வாடிக்கையாளரும் தேவை என்பதை அவன் நன்கறிந்து இருக்கின்றான். நம்முடைய கவனம் இங்கே மனிதர்களை ஒட்டுமொத்தமாக வழிகெடுத்த மாபெரும் மனோவசியக் காரனான ஷைத்தானைப் பற்றி மட்டுமே. இம்மாபெரும் மனோவசியக் காரனான ஷைத்தானும் தன் கட்டுப் பாட்டின் கீழ் உள்ளவர்களின் நம்பிக் கையைப்பெற்றவனாகஇருக்கிறான் . ஆனால்மனிதமனோவசியக்காரர்கள் போலல்லாமல் அவன் நம் கண்களை விட்டும் மறைந்தவனாக இருக்கிறான்.

"ஷைத்தானும் அவன் சந்ததி யினரும் உங்களைப் பார்க்கின்றனர்.

ஆனால் உங்களால் அவர்களை பார்க்க முடியாது. நம்பிக்கை கொள்ள மறுப்ப வர்களுக்கு சைத்தான்களையே நாம் தோழர்களாக ஆக்கியிருக்கிறோம்." (7:27)

ஷைத்தான் ஒரு தேர்ந்த மனோ வசியக்காரன், ஏனெனில் அவன் அவரவர் மனத்திற்கும், குணத்திற்கும் ஆசைகளுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ப தனது யோசனையை எப்பொழுது, எப்படி கூற வேண்டும் என்பதை நன்கறிவான். மனிதனின் தன்மைகளை பற்றி அவனுக்கு கணிசமான அறிவு இருக்கிறது. மேலும் கோடிக்கணக்கான மனிதர்களை தங்களது மூளையை உபயோகிக்க முடியாதபடி செய்வதில் குறிப்பிடதக்க வெற்றி அடைந்திருக்கிறான்.

ஷைத்தான், இறைவனிடம் கூறினான் "நான் அவர்களுக்கு முன்னிருந்தும் பின்னிருந்தும் வலமிருந்தும் இடமிருந்தும் வருவேன். அவர்களில் பெரும்பான்மையானோரை நன்றி கெட்டவர்களாக நீர் காண்பீர்." (7:17)

இறைவனுக்கு நன்றி கெட்டவர்கள் தங்களை அறியாமலேயே ஷைத்தானின் மாய வலையில் விழுந்து விடுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான மனிதர்கள் "நான் இறைவனை நம்புகிறேன்" என்று கூறுவார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் உள்ளங்கள் அதனை நம்பவில்லை பெற்றோருடனும், உற்றாருடனும், ஊராருடனும், உலகத் துடனும் ஒத்துப் போக அவர்கள் கூறும் வெற்று வார்த்தைகளே அவை, ஏமாற்றத்திலிருந்தும், சந்தேகத்தி லிருந்தும் விலகிக் கொள்ள சந்தர்ப் பங்கள் கிடைக்கும் போது அவர்கள் இட்டுக்கட்டப்பட்ட பொய்களை பற்றிப் பிடித்துக் கொள்கிறார்கள். இதன்மூலம் அவர்கள் ஷைத்தானின் மனோவசியத் திற்கு தங்களை தயார்ப்படுத்தி கொள்கிறார்கள்.

மாபெரும் மனோவசியக்காரனுக்கு மனிதர்களின்வெளித் தோற்றங்களும்,வாய்வார்த் தைகளும், மட்டுமின்றி, அவர்களின் உள்ளத்தில் உள்ள உண்மையான நம்பிக்கையும் அவனுக்கு காட்டப்படுகின்றன.

இறைவனை மட்டுமே வணங்க வேண்டும், அவர் சொற்களுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும் என்ற இறைவன் கொடுத்த உள்ளுணர்வு களுக்கு மாறாக மனிதர்கள் நினைக்கும் போது ஷைத்தான் அவர்களை அழிவில் தள்ளிவிடுகின்றான்.

"வேதத்தையுடையோரில் ஒரு சிலர் உங்களை வழிகெடுக்கவே விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் உணராமலேயே தங்களைத் தாங்களே வழிகெடுத்துக் கொள்கிறார்கள்." (3:69)

"இணைவைப்பவர்கள் மற்றவர்களைக் குர் ஆனை விட்டும் தடுக்கிறார்கள். அவர்களும் அதைவிட்டு விலகி இருக்கின்றனர். இவ்விதமாக அவர்கள் உணர்ந்து கொள்ளாமலே தங்களைத் தாங்களே அழித்து கொள்கிறார்கள்" (6:26)

"யார் நம் வசனங்களை மறுக்கிறார்களோ அவர்களை உணராத வர்களாகவே செல்லவிடுவோம் நிச்சய மாக நம் சூழ்ச்சி தவிர்க்க முடியாத தாகும்." (7:182-183)

ஷைத்தான் தன் யோசனைகளை தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவர்களுக்கு படிப்படியாகவே கூறுகிறான். அவை அனைத்தும் இறைவன் மட்டும் வணக்கத்திற்குரியவர் என்பதற்கு மாறானயோசனைகளே நிராகரிப்பு, இணைவைப்பு, நயவஞ்சகம், போன்றவற்றைப்பிரதி பலிக்கும் எல்லாக்காரியங்களையும் செய்யும்படிமனோவசியம் செய்கிறான்.

ஷைத்தான் மனிதர்களிடம் கூறுகிறான். "நிராகரித்து விடு" அவ்வாறு மனிதனும் நிராகரித்ததும் அவன் கூறுகிறான். நான் உன்னை விட்டு விலகிக் கொண்டேன் அகிலங்களுக்கெல்லாம் இரட்சகரான இறைவனை நான் அஞ்சுகிறேன்" (59:16)

இந்தப்படிப்படியான அணுகுமுறை ஷைத்தானின் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் அவனுடைய ஆலோசனைகளை விளங்கிக்கொள்ள உதவி செய்கிறது.இத்தீய ஆலோசனைகள் தம்மைப்பாதுகாப்பாகவைத்திருக்கும் என்று அவர்கள் எண்ணிக் கொள்கின்றனர்.

இறைவன் நம்பிக்கையாளர்களை மனோவசியம் செய்வதிலிருந்து, மாபெரும் மனோவசியக்காரனைத் தடுத்து அவர்களைக் காப்பாற்றவிடுகிறார். நம்பிக்கையாளர்களை மனோவசியம் செய்ய ஷைத்தான் செய்யும் வெளிப்படையான மறைமுகமான அனைத்து முயற்சிகளையும் தடுத்து விடுகிறார்.

"நீர் கூறுவீராக" என் இரட்சகரே! ஷைத்தானின் யோசனைகளை விட்டு உம்மிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன். என் இரட்சகரே அவை என்னிடம் நெருங்குவதை விட்டும் உம்மிடம் பாதுகாவல் தேடுகிறேன். (23:97-98)

இக்கட்டுரை சென்ற இதழில் Dr . Rashid Hamed அவர்களுடைய Satan The Master Hypnotist கட்டுரையின் தமிழாக்கம் ஆகும்.

❊ ❊ ❊

## விளக்கம்

சென்ற இதழில் "பூமி தட்டை யானது" என்ற கட்டுரையில் "பூமி முட்டை வடிவத்தில் உள்ளது" என்ற 79:30 வசனத்தை குறிப்பிட்டு இருந்தோம். தமிழ் மொழி பெயர்ப்புகளில் "பூமியை விரித்து விட்டிருக்கிறோம்" என மொழி பெயர்த்துள்ளனர். ஆயினும் அவ் வசனத்தில் 'தஹாஹா' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதுவே முட்டை வடிவத்தை குறிக்கும் சொல்லாகும். "தஹீயா" என்ற அரபி வார்த்தைக்கு முட்டை என்பதே அர்த்தமாகும்.

# குர்ஆன் மட்டும் போதாதா?

## அல்முபீன் கேள்வியும், நமது விளக்கமும் :

சென்ற இதழில் அல்முபீன் செய்தி ஆசிரியர் P.J. எழுப்பிய சில கேள்விகளுக்குரிய பதில்களைக் கண்டோம். அவரின் மற்ற. கேள்விகளுக்குரிய பதில்களை நாம் குர் ஆனின் ஒளியில் ஆராய்வதற்க்கு முன் அவர் எழுதியமுன்னுரையையும் சற்றுப்பார்ப்போம்.

**விஞ்ஞான நிரூபணம் கொண்டது குர்ஆன் மட்டுமே ஹதீஸ்கள் அல்ல.**

"இன்று விஞ்ஞானத்திற்கு முரண்படாத ஒரு மார்க்கம் உண்டு. என்றால் அது இஸ்லாமாகத்தான் இருக்க முடியும்" என்று அல்முபீன் ஆசிரியர் எழுதியிருக்கிறார். இது உண்மையே ஆனால் அது ஹதீஸ்களின் அடிப்படையில் ஆன இஸ்லாம் அல்ல. ஹதீஸ்களின் அடிப்படையில் மதினா பல்கலைக் கழகத்தின் முஃப்தி பென்பாஸ், உலகம் தட்டையானதே என்று மிகச் சமீபத்தில் அளித்த விஞ்ஞான தீர்ப்பை? சென்ற இதழில் நாம் ஆதாரத்துடன் கண்டோம்.

குர் ஆனில் கூறப்படும் பல வசனங்களுக்கு ஆதாரமாக பற்பல நவீன விஞ்ஞான உண்மைகளை எடுத்து வைக்கும் இவர்கள், ஹதீஸ்களை பற்றிய விஞ்ஞான உண்மைகள் எதையும் கூற முடியவில்லையே ஏன்? நவீன விஞ்ஞான உண்மைகளான பெருவெடிப்பு (Big Bang) urfloor ITLO QATOR (Evolution) பற்றியெல்லாம் குர்ஆன் கூறியிருக்கிறது என்று பெருமை பேசி கொள்ளும் இவர்கள் நபிக்கு குர் ஆனைத் தவிர வேறெந்த அற்புதமும் கொடுக்கப்படவில்லை (29:50,51) என்ற குர்ஆனின் கூற்றுக்கு மாறாக முஹம்மது நபி தன் விரலைக் காட்டி நிலவை பிளந்தார்கள் என்பது போன்ற செய்திகளுக்கு ஏன் விஞ்ஞான நிரூபணங்கள் தரமுடியவில்லை ? பல்லாயிரம் வருடங்களுக்கு முன் இவ்வுலகிலும், நிலவிலும், வானிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிந்த இன்றைய விஞ்ஞானிகள், 1400 வருடங்களுக்கு முன் இத்தகைய சம்பவம் நடந்திருந்தால் அதைப்பற்றி ஏன் கூறவில்லை ?

இது ஏனெனில், குர்ஆன் இறைவனால் இறக்கப்பட்ட சத்தியம், வானங்கள் பூமியைப் படைத்தவர் இறைவன் அவர் அவற்றைச் சத்தியத்தின் அடிப்படையிலேயே படைத்திருக்கின்றார்.

(29:44) எனவே அவை ஒன்றுக்கொன்று முரண்படாது. ஆனால் ஹதீஸ்கள் நபியின் காலத்திற்கு பின்னர் வாழ்ந்த மனிதர்கள் நபியின் பெயரால் கூறியது. மனிதர்களின் அறிவு (Certain Limits) குறிப்பிட்ட எல்லை களுக்குட்பட்டது.

எனவே காலங்கள் பல கடந்தாலும் அனைத்தையும் படைத்த, அறிந்த அல்லாஹ்வின் சொற்கள் சத்தியமாகவே இருக்கும். மனிதர்களின் சொற்களோ அவர்களின் குறைபட்ட அறிவை வெளிப்படுத்திவிடும். எல்லாம் வல்ல ஞானம் நிறைந்த இறைவனின் சொற்களான அல்குர் ஆனுக்கு முன், மனிதர்கள் கூறிய சொற்களான ஹதீஸ்கள் ஒப்பாக நிற்கவே முடியாது. அல்லாஹ்வின் சொற்களை போலவே மனிதர்களின் சொற்களையும் நினைப் பவர்கள் நம்புபவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைப்பவர்கள் அன்றி வேறு யார்?

இன்னும் ஹதீஸ்கள் நிருபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளுக்கு எவ்வா றெல்லாம் முரண்படுகிறது என்பதை நாம் வரும் இதழ்களில் காண்போம்.

## <u>ஒற்றுமை ஏற்படுத்தும் குர்ஆனும் பிளவுகளை உண்டாக்கும் ஹதீஸ்களும்</u>

அடுத்து, அவர், இஸ்லாத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், தங்கள் கருத்துகளை நிலை நாட்டுவதற்கு குர்ஆனிலிருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறார்கள் என்று எழுதியிருக்கிறார் இன்று முஸ்லிம்களில் எந்தப் பிரிவினரும் குர் ஆனை மட்டும் நம்புவதில்லை அத்துடன் சேர்த்து ஹதீஸ்களையும் நம்புகிறார்கள். ஆனால் ஒரு பிரிவார் நம்பும் ஹதீஸ்களை மற்ற பிரிவினர் நம்புவதில்லை இவர்களுக்கு ஸஹீ ஹானது (உண்மையானது) அவர்களுக்கு லயீஃப் (பலஹீனமானது) ஆகும். இவர்கள் ஏற்றுக் கொள்ளும் ஹதீஸ்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் ஷியா பிரிவினரோ நீங்கள் வைத்திருக்கும் ஸிஹாஹ்ஸித்தா முழுவதையுமே ஒப்புக் கொள்வதில்லை. பிரிவுகள் உண்டானது குர்ஆன் வசனங்களாலல்ல அத்துடன் சேர்த்து ஹதீஸ்களும் மார்க்கமாக கூறப்படுவதால் தான். பிரிவுகளில் உள்ளவர்களுக்கும் முஹம்மத் நபிக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்று குர்ஆன் வசனம் கூறுகிறது (6:159).

எனது சமுதாயம் 73 கூட்டங்களாகப் பிரியும் அதில் ஒரு கூட்டம் மட்டுமே சொர்க்கம் செல்லும் என்று ஒரு ஹதீஸை இட்டுக்கட்டி வைத்துக் கொண்டு இப்பிரிவினர்கள் ஒவ்வொவருவும் முஹம்மத் நபியை அவர் எங்கள் பிரிவைச் சார்ந்தவர் என்று கூறிக்கொள்கின்றனர். என்ன ஒரு விந்தையான வாதம்? என்ன ஒரு முரண்பாடு? மார்க்க ஆதாரம் இறைவன்அருளிய குர்ஆன்மட்டுமே

அடுத்து அவர், குர்ஆன் மட்டும்' போதும் என்ற கொள்கை காரிஜியாக்கள் என்று ஒரு கூட்டத்தினரின் கொள்கையாகும், என்று எழுதி, இப்பொழுது குர் ஆன் மட்டும் தான் மார்க்கம் என்று கூறுபவர்கள், ஏதோ

காரிஜியாக்கள் என்ற கூட்டத்தி னரிடமிருந்து, இந்த செய்தியை பெற்றது போன்று ஒரு தோற்றத்தை உண்டாக்க முயற்சி செய்திருக்கிறார். நாங்கள் எங்களின் இந்தச் செய்திகளைப் பெற்றது அல்லாஹ்விடமிருந்தும், அவர் தூதரிட மிருந்தும் தானே அன்றி காரிஜியாக்களிடமிருந்தல்ல.

வழக்கம் போலவே தேவையில்லாமல் மக்களைக் குழப்புவதற்காக அவர் செய்யும் தந்திரமே இது.எங்களின் அசலான பின்னனியை நன்கறிந்திருந்தும் அவர் அதைக் குறிப்பிடாமல் காரிஜியாக்களைப் பற்றித் தேவையில்லாமல் எழுதியிருப்பது கண்டு, அல்லாஹ்வுக்கும், அவரின் தூதருக்கும் எதிராக எழுத அஞ்சுகிறார் என்று நல்லெண்ணம் கொள்வோம். நாங்கள் எங்கிருந்து எங்கள் செய்திகளைப் பெற்றோம் என்பதையும் எங்கள் இதழ்களில் தெரியப்படுத்தியே வருகிறோம்.

எனினும் தேவையில்லாமல் அவர் காரிஜிய்யாக்களைப் பற்றி எழுதியிருப் பதால் அது குறித்த நம் கருத்துக்களைக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் இந்த இடத்தில் உண்டாகிறது.

## இவர்களில் சத்தியத்திற்காக போரிட்டவர்கள் யார்?

அவர் கூற்றுப்படி அலிக்கும் முஆவியாக்கும் ஸிஃப்பீன் என்ற இடத்தில் போர் மூண்டு இரு தரப்பிலும் கடுமையான சேதம் ஏற்பட்டதாம். ஆயிஷா (ரலி) பெயரை இதில் அவர் குறிப்பிடவில்லை, என்றாலும் அவர்களும் அலியை எதிர்த்துப் போர் செய்தார்கள் என்றே இவர்களின் (ஹதீஸ்கள்) வரலாற்றுச்தகவல்கள் கூறுகின்றன.

நாம் கேட்கிறோம் (முஆவியா தலைமையில்) ஆயிஷாவுக்கும் அலிக்கும் ஏன் போர் நடந்தது? ஏன் சஹாபாக்கள் என்ற நபித் தோழர்கள் இருபிரிவினராகப் பிரிந்து ஒருவருக் கொருவர் எதிராக வாளேந்தினர்? இரு படையினரில் ஒரு கூட்டத்தினர் தானே சத்தியத்துக்கு ஆதரவாக இருந்திருக்க முடியும்? ஒரு பிரிவினர்தானே நியாயத்துக்காகப்போராடி இருக்க முடியும்? பின் எப்படி நீங்கள் முஆவியாவையும் ரலி என்ற (அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும்) என்று கூறுகிறீர்கள், அலீயையும் ரலி என்று கூறுகிறீர்கள்? இருவரில் யார் சத்தியத்துக்காப்போராடினரோ அவர்கள் தானே அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெறமுடியும்? இல்லை அவர்கள் கொள்கை ரீதியில் சண்டை யிடவில்லை கருத்து வேறுபாடுகள் தான் என்றால், கருத்து வேறுபாடுகளைக் களைய சண்டையிட்டுக் கொள்ள வேண்டும் என்று குர்ஆன் கூறுகிறதா? இல்லை நபி சொன்னதாக இவர்கள் இட்டுக்கட்டிய ஹதீஸ்கள் கூறுகிறதா?

இரு தரப்பிலிருந்து எதிரெதிராகச் சண்டை யிட்டவர்கள் இவர்கள், ஆனால் இரு தரப்பினரும் அறிவிக்கும் (ஹதீஸ்களை) செய்திகளை எவ்வாறு நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்?

அவற்றை மார்க்கம் என்று கருதுகிறீர்கள்? இருபிரிவினரில் சத்தியத்துக்காகப் போரடியது யார் என்று எப்படி நீங்கள் அறிந்து கொள்ளப் போகிறீர்கள்?

## நபியின் வாரிசுகள், உறவினர்கள் கொல்லப்பட்டது ஏன்?

அலீயின் பின்னால் இருந்த காரிஜியாக்கள் திடீரென்றா குர் ஆன் மட்டும் மார்க்கம் என்று கூறிப்பிரிந்து சென்றுவிட்டனர்? குர் ஆனை மட்டும் பின்பற்ற வேண்டும் என்று அவர்கள் கூறியதில் என்ன தவறு இருக்க முடியும்? குர் ஆன் மட்டும்தான் மார்க்கம் என்று கூறியதில் அவர்களுக்கு இருந்த சொந்த நோக்கம் தான் என்ன? சொந்த நோக்கத்திற்காக அவர்கள் இதை உருவாக்கினார்கள் என்று குற்றம் சாட்டும் அல்மூபீன் செய்தி ஆசிரியர் அந்தச் சொந்த நோக்கம் என்னவென்று கூற வேண்டாமா? இதன் மூலம் எதை மறைக்கப் பார்க்கிறார்.

அலி, முஆவியா இருவரும் சமாதானத்திற்கு ஒப்புக் கொண்டதாகக் கூறியிருக்கிறார். சமாதானம் ஏற்பட்டதா இல்லையா? ஏற்பட்டது என்றால் ஏன் அலியும், முஆவியாவும், காரிஜிய்யாக் களைக் தனித் தனியாகப் படையெடுத்து அழிக்க முயற்சிக்க வேண்டும்? காரிஜியாக்களை வேரறுத்தது அலீயா அல்லது முஆவியாவா?

"அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை, அல்லாஹ்வின் வேதமான குர்ஆனில் கூறுகிறபடிதான் தீர்ப்பு செய்ய வேண்டும்" என்ற காரிஜியாக்களின் கோரிக்கைக்காக அவர்களுக்கு எதிராக போர்தொடுத்து வேரறுருக்கும் அளவு அவர்கள் மார்க்கத்திற்கு எதிராக என்ன கூறிவிட்டார்கள்?

நபி மரணப்படுக்கையில் இருக்கையிலேயே சண்டையிட்டு கொள்ள ஆரம்பித்து, நபி மரணித்து 19 வருடங்களுக்குள்ளேயே பல பிரிவினர் களாகப் பிரிந்து ஒருவருக் கொருவர் எதிராக வாளேந்திய இந்த மனிதர்கள் கூறியதை நபி கூறியதாக நாம் எப்படி நம்ப முடியும்?

உமர், உதுமான், அலீ, ஹஸன், ஹீசைன் போன்ற நபிக்கு மிக நெருக்கமானவர்கள், உறவினர்கள் அனைவரும் கொல்லப்பட்டது ஏன்? பதவிக்கு ஆசைப்பட்டவர் அலீ' என்று இந்த ஹதீஸ்கள் கூறுவதை எப்படி நம்புகிறீர்கள்?

அவர்கள் கூறிய வரலாற்றுச் செய்திகளில் உள்ள நம் கேள்விகளை இத்துடன் நிறுத்தி விட்டு (மீதமுள்ளவற்றைப் பின்னால் காண்போம்) மேற்கொண்டு அவரின் விமர்சனத்திற்குச் செல்வோம்.

## குர்ஆன் போதும் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக்கே முரண் என்கிறார் அல்முபீன்

<u>ஆசிரியர் :</u>

அடுத்து அவர் எழுதியுள்ளது

அல்லாஹ் கற்றுத்தரும் முறைப்படி குர் ஆனை சிந்தித்தால் குர்ஆன் மிகத்தெளிவான வேதம் என்பதில் நமக்குச் எந்தச் சந்தேகமும் இல்லை " இவ்வளவு அழகாக ஒப்புதல் வாக்குமூலம் தந்த அவர் உடனே பின் வாங்கிச் செல்வதையும் கவனியுங்கள். தொடர்ந்து அவர் எழுதுகிறார். எனினும் இந்த வாதத்தை நிலை நிறுத்துவதற்காகவும் குர்ஆன் மட்டும் போதும் என்ற கொள்கை இஸ்லாத்திற்கு முரணானது என்பதை அந்தக் கொள்கை உடையவர்களுக்கும் புரியவைப்பதற்கும் சில கேள்விகளை இவ்விதழில் எழுப்பியுள்ளோம் இந்தக் கேள்விகள் குர்ஆனைப் பற்றிய தவறான எண்ணங்களை உருவாக்கி விடக்கூடாது என்பதால் வாசகர்கள் இந்த இதழை கவனமாகவும், முழுமையாகவும் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். என்று அல்முபீன் இதழ் கூறுகிறது.

மேற்கண்ட வாசகங்களை, வாசகர்கள் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் இவர் தனக்கு தானே முரண்படுவதையும் இத்தகைய குர்ஆனைப்பற்றிய கேள்விகள் அவரைப்பற்றியத்தவறான எண்ணங்களை உருவாக்கிவிடக்கூடும் என்று அவர் அஞ்சுவதையும் காட்டுகிறது.

எனினும் அவரின் இத்தகைய கேள்விகள் சிந்தனை இல்லாதவர் களுக்கும், குர்ஆனைப் பற்றி அறியாதவர்களுக்கும் தவறான எண்ணங்களை உருவாக்கவே செய்யும். எனினும் சிந்திப்பவர்கள் அவர் கேள்விகளிலுள்ள விஷமத்தனத்தையும், அறிவீனத்தையும் நன்கு உணர்ந்து கொள்ள முடியும். வாசகர்கள் அவர் கேள்விகளையும் குர்ஆன் ஒளியில் அதற்கு நாம் கூறும் பதில்களையும் கவனமாகப் படிக்க வேண்டும் என்றே நாங்களும் கேட்டுக் கொண்டு அவருடைய மற்றக் கேள்விகளைப் பார்ப்போம்.

### அல்முபின் கேள்வியும், நமது விளக்கமும் :

வசனம்: ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள் (2:196)

கேள்வி : இவ்வசனத்தில் இடம் பெறும் உம்ரா என்பது என்ன?

வசனம்: ஹஜ்ஜீக்குரிய காலம் குறிப்பிட்ட மாதங்களாகும் (2:196)

கேள்வி : ஹஜ்ஜீக்குரிய மாதங்கள் எவை? மாதங்கள் என்று பன்மையில் கூறப்படுவதால் அம் மாதங்களில் ஹஜ்ஜின் காரியங்கள் என்னென்ன செய்ய வேண்டும்.

வசனம் : தங்களுக்குரிய பலன்களை அடைவதற்காகவும் குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள கால்நடைகளின் மீது அவன் பெயரைச் சொல்பவர்களாகவும் வருவார்கள். (22:28)

கேள்வி : இதில் கூறப்படும் குறிப்பிட்ட நாட்கள் எவை?

வசனம் : ஈமான் கொண்டவர்களே ஜீம்ஆ நாளில் தொழுகைக்காகஅழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டு

விட்டு அல்லாஹ்வை தியானிக்க விரைந்து செல்லுங்கள் (63:9)

கேள்வி : இவ்வசனத்தில் கூறப்படும் அழைப்பு என்பதன் பொருள் என்ன ?

ஜும்ஆ தினத்தின் காலையில் யாராவது வந்து தொழுகைக்கு அழைத்தால் வியாபாரத்தை விட்டு விட்டு செல்ல வேண்டுமா.

குர் ஆனை பரிகாசம் செய்யும் கேள்விக் கணைகள் :

முதலில் அவ்வரிசையில் நான்காவதாக இடம் பெறும் கேள்வியைப் பார்த்தவுடன் நமக்கு அதிர்ச்சியே ஏற்பட்டது. இத்தகைய கேள்விகளையும் ஒரு இஸ்லாமிய இதழில் வெளியிடு வார்களா? இந்தச் சமுதாயத்தை சுயமாக சிந்திப்பதிலிருந்து தடுப்பதில் நாம் வெற்றியடைந்து விட்டோம் என்று இந்த ஆலிம் வர்க்கம் இறுமாந்திருப்பதன் அடையாளமே இது. நாம் என்ன கூறினாலும் இந்த சமுதாயம் ஏற்றுக் கொள்ளும், பாராட்டும், கிளிப்பிள்ளை போல் திருப்பிச் சொல்லும் என்று இவர்கள் முடிவெடுத்திருப்பதின் விளைவே இது. இல்லையென்றால் இத்தகைய கேள்விகளைக் கேட்கும் துணிவு இவர்களுக்கு வந்திருக்குமா? வாதத்தை நிறுத்த வேண்டும் என்பதற்காக எப்படி வேண்டுமானாலும் கேள்வி கேட்பதா?

இத்தகையோரைக் குறிப்பிடத்தான் இறைவன் 25:73ல் "நம்பிக்கைகொண் அல்லாஹ்வின் அடியார்கள் . தங்கள் ரப்பின் வசனங்களைக் கொண்டு நினைவூட்டப்படும் போது குருடர்கள் போலும், செவிடர்கள் போலும் நடந்து கொள்ள மாட்டார்கள் என்று கூறுகிறார்." இறைவனின் சொற்களை அப்படித்தான் குருடர், செவிடர் போல் நாங்கள் அணுகுவோம் என்பதற்கான அவர்கள் ஒப்புதல் வாக்குமுலமே இது. குர்ஆன் வசனங்களை அல்லாஹ்வின் சொற்கள் என்ற முறையில் விழிப்போடும், கவனத்தோடும். சிந்தனையோடும் மெய்யான நம்பிக்கையோடும் அணுகு வோருக்கு மட்டுமே குர் ஆன் புரியும் என்று அல்லாஹ் கூறுகிறார். (18:57)

இதைவிடப் பெரிய அக்கிரமம் ஒன்றையும் இந்த இடத்தில் நாம் குறிப்பிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகிறோம். முபீன் இதழில் பக்கம் 37ல் "உன்னையே நாங்கள் வணங்குகிறோம் உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்" (1:4) என்ற வசனத்தை குறிப்பிட்ட விட்டு அவர் எழுதுகிறார்.

"அல்லாஹ் நபி அவர்களுக்கு அறிவித்த செய்திகள் தான் குர்ஆன். இதைக் கருத்தில் கொண்டு இந்த வசனத்தைச் சிந்தியுங்கள் அல்லாஹ்வே (ஸீப் ஹானல்லாஹ்- இறைவன் மிகப் பரிசுத்தமானவர்) நபி அவர்களை வணங்குவதாகவும், அவர்களிடம் உதவி தேடுவதாகவும் இந்த வசனம் கூறுகிறது. என்று கூற முடியுமா? என்று கேட்கிறார்.

இணைவைப்பை எதிர்க்கவே முஹம்மத் நபி தன் வாழ்நாளைச்செலவு

செய்தார் என்பது மாற்றாரும் மறுக்க முடியாத உண்மை . அதற்காக அவர்பட்ட கஷ்டங்களை துன்பங்களைக் குர்ஆன் முழுமையும் நமக்கு விவரிக்கிறது. அப்படியிருக்க அவர் தந்த வேதத்தைச் சொந்தம் கொண்டாடும் இந்த ஆலிம்களுக்கு இவ்வாறு சிந்தனை செய்யும் துணிவு எங்கிருந்து வந்தது? நல்ல நம்பிக்கை யுடையவர்களுக்கு இத்தகைய சிந்தனைகள் வருமா? குழப்பம் இல்லாத விஷயங்களில் குழப்பம் இருப்பது போல் காட்டி சிந்திப்பதை விட்டும் மக்களை தடுப்பதுமே இவர்கள் நோக்கம் என்பதை இந்தக் கேள்வி எடுத்து காட்டுகிறது. இது எல்லாம் வல்ல இறை வனின் வார்த்தைகளை - அல்குர் ஆன் ஐ பரிகாசம் செய்வது இல்லையா? இந்தக் கேள்விகளின் உள் நோக்கங்களை சிந்தனை செய்பவர்களே விளங்கிக் கொள்ள முடியும் சிந்திக்கும் பொறுப்பை வாசகர்களிடமும் வழிகாட்டும் பொறுப்பை அல்லாஹ்விடமும் ஒப்படைத்து விட்டு அவரின் மற்ற கேள்விகளைப் பார்ப்போம்.

நல்ல நம்பிக்கை கொண்ட சகோதரர்களும் இவர் கேட்கும் இது போன்ற சில கேள்விகளைக் கேட்கவே செய்கிறார்கள் இத்தகைய கேள்விகள் குர்ஆனைப் பற்றிய இவர்கள் அறியா மையை வெளிப்படுத்துவதுடன், அவர்கள் பின்பற்றும் மார்க்கம், அவர்கள் நம்பும் அறிஞர்கள், ஆலிம்கள், பெற்றோர்கள் போன்றோரிடம் கேட்ட செவிவழிச் செய்திகளும், யூகங்களுமே என்பதையே காட்டுகின்றன.

__தவறான மூன்று நம்பிக்கைகள் :__

இத்தகைய கேள்விகள் மூன்று விஷயங்களை(வெளிப்படுத்து வதாக) தனக்குள் அடக்கியதாக உள்ளது.

1. அல்லாஹ் தன் திருமறையை முழுமையானது, தெளிவானது, விவரிக் கப்பட்டது என்று கூறுவதை இவர்கள் நம்பாததும், ஆழ்மன அளவில் இறைவன் கூறியது சரியாக இல்லை குர் ஆன் போது மானதல்ல என இவர்கள் நம்புவது.

2. இந்தக் கேள்விகளுக்குரிய பதில்கள் ஹதீதுகளில் தான் உள்ளது எனவே குர் ஆனுடன் ஹதீதுகளையும் மார்க்க ஆதாரமாகப் பின்பற்றியே ஆக வேண்டும் என இவர்கள் நம்புவது.

3. அல்லாஹ் நமக்குக் குர்ஆனில் இன்றைய இஸ்லாத்தின் வழிபாட்டு முறைகள் (தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ்) அனைத்தும் இப்றாஹிம் நபிக்கு கொடுக்கப்பட்டது. என்று கூறுவதை நம்பாமல் முஹம்மது நபிதான் அதை நமக்குக் தந்திருக்கிறார் என்று நம்புவது. மேற்கண்ட இம்மூன்று விஷயங்களும் அடிப்படைலேயே தவறானதாகும்.

**குர்ஆன் முழுமையானது என்ற அல்லாஹ்வின் சொல்லை நம்பாதவர்கள் :**

குர் ஆன் அல்லாஹ் கூறியபடி நிச்சயமாக முழுமையானதும், தெளி வானதும், விவரிக்கப்பட்டதும் ஆகும். 1400 வருடங்களுக்கு முன் முஹம்மத் நபி இறைவனிடமிருந்து பெற்று இவ்வுல குக்குத் தந்த குர் ஆன் கியாம நாள்வரை பாதுகாப்புடன் இருந்து மனித சமுதாயத்

திற்கு வழிகாட்ட வேண்டியதாக உள்ளது. இதில் அனைத்துக் விஷயங்களும் வேண்டியதாக தேவையான அளவுக்குத் தெளிவாகவும் விவரிக்கப் பட்டதாகவும் இருக்கிறது. எவையெல்லாம் மனித சமூகத்தின் மீட்சிக்கு அவசியமோ அவை அனைத்தும் கூறப்பட்டே இருக்கிறது. இந்த இடத்தில் மெய்யாகவே குர்ஆனை ஒரு மனிதன் நம்புகிறானா? இல்லை வெறும் வாய் வார்த்தையாக நானும் நம்புகிறேன் என்று கூறுகிறானா? என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும்.

மெய்யான நம்பிக்கை கொண்டவர்கள் இறைவன் கூறுவதைக் கேட்டோம் கட்டுப்பட்டோம் என்றே கூறுவர். ஆனால் முழு நம்பிக்கை இல்லாதவர்கள் தான், "குர்ஆன் முழுமையானது தான் ஆனால் அதில் இந்த, இந்த விபரங்கள் இல்லையே என்பர். இந்த 'ஆனால்' என்ற வார்த்தையே அவர்களின் - அவ நம்பிக்கையைக் குறிக்கிறது. இறைவன் முழுமையானது, விவரிக்கப்பட்டது, என்று கூறுகிறான் என்றால் அதை நம்பி அதன் அடிப்படையில் அதாவது குர்ஆன் ஒளியில் மட்டும் நம் கேள்விகளுக்கான பதில்களைத் தேட வேண்டியதே நம்பிக்கையுடையோர்கடமைஆகும். குர்ஆனோடு மற்றொன்றும் வேண்டும் என்று பலப்பலபிரிவுகளை உண்டாக்கிய அநியாக்காரர்கள் :

இரண்டாவதாக :- இத்தகைய கேள்விகளுக்கான தெளிவான பதில்கள் ஹதீதுகளிலும் இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தொழுகை ஹஜ் போன்ற கிரியைகளில் மத்ஹபுக்கு மத்ஹபு, பிரிவுக்கு பிரிவு, வேறுபாடுகள் உள்ளன என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை . ஹனஃபியின் தொழுகை ஒன்று, ஷாஃபியின் தொழுகை ஒன்று, ஹன்பலி மத்ஹபில் உள்ள ஹஜ் கிரியைகளும், மாலிக்கி மத்ஹபில் உள்ள ஹஜ் கிரியைகளும் வேறு வேறு, மத்ஹபுகளெல்லாம் தவறு ஸஹீஹான ஹதீஸ்கள் மட்டும் தான் மார்க்கம் என்று கூறும் அஹ்ல ஹதீஸீனரின் தொழுகை ஒரு மாதிரி அதையே கூறும் ஜமாத்துல் முஸ்லிமீன் அமைப்பினரின் தொழுகை ஒரு மாதிரி, (தேவை இல்லாத விஷயங்களை பெரிதுபடுத்தி அதன் அடிப்படையில் பிளவுபட்டுக் கிடக்கும் இவர்கள் நிலைக்கு ஒரு உதாரணம் (தஷஹ்ஹுது) தொழுகை இருப்பில் இவர்கள் அனைவரும் வெவ்வெறு விதங்களில் விரலாட்டுவது ஒவ்வொருவரும் ஒரு விதம் ஷைத்தான் களுக்கு யார் எந்த பிரிவை சேர்ந்தவர் என்பதைக் கண்டு பிடிப்பது சுலபம்) இதற்குக் காரணமே ஹதீஸ்கள் தான்.

## பிரிவுகளால் ஷைத்தான் வெற்றியடைந்து விட்டான்?

ஒவ்வொரு பிரிவினருமே இத்தகைய சில்லறை விஷயங்களில் வேறுபட்டுக் கொண்டு பிளவு, பிளவுக்குள் பிளவு என்று ஷைத்தானியப் பரிணாம வளர்ச்சி பெற்றுக் கொண்டு உள்ளனர், ஒவ்வொருக்கும் தான் சொல்வதே சரியென்றும், அதற்கான ஆதாரங்கள் ஹதீஸ்களில் உள்ளனவென்றும் கூறுவர்.

அந்த அளவுக்கு ஹதீஸ்களில் ஒன்றுக்கென்று முரண்பாடான - வாசகங்களையே ஷைத்தான் இடம் பெறச் செய்துள்ளான். இவ்விதமாக ஷைத்தான் இஸ்லாத்தின் முக்கிய கடமைகளான தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் ஆகிய அனைத்து கிரியைகளிலும், வாழ்வியல் பிரச்சனைகளான திருமணம், சொத்துரிமை விவாகரத்து போன்ற வற்றிலும் இன்றைய முஸ்லிம்களனை வரையும் மனித யூகங்களைப் பின்பற்றக் கூடிய பற்பல பிரிவினர்களாக ஆக்குவதில் வெற்றி பெற்று விட்டான்.

**மறுமை நாள் வரை வழிகாட்ட, குர்ஆன் ஒன்றே போதுமானது :**

இத்தகைய கேள்விகளுக்குக் குர்ஆனில் பதில்கள் இல்லை என வே ஹதீஸ்களைப் பின்பற்றித்தான் ஆக வேண்டும் என்று நினைக்கும் நம்பிக்கை உள்ள சகோதரர்களுக்கு ஹதீஸ்களிலும் இத்தகைய கேள்விகளுக்குத் தெளிவான. முடிவான பதில்கள் இல்லை என்பதை எடுத்துக் காட்டவே இத்தனையும் எடுத்துரைக்கிறோம். குர் ஆன் மனித சமுதாயம் முழுமைக்கும் மறுமை நாள் வரை வழிகாட்ட. இறைவன் தேவையான முக்கியமான அவசியமான அனைத்தையும் தெளிவாக அதில் கூறியே இருக்கிறார்.

நபி இப்ராஹிமின் மார்க்கத்தையே, நபி முஹம்மது பின்பற்றினார் நாமும் பின்பற்ற வேண்டும்.

மூன்றாவதாக சென்ற இதழில் விவரித்திருந்தபடி இம்மார்க்கத்தின் வழிபாட்டு முறைகள் அனைத்தும் இப்றாஹிம் நபி காலம் முதலே வழிவழியாக நிலை நாட்டப்பட்டே வந்துள்ளது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள மறுப்பது அல்லாஹ் குர்ஆனில் 22:78 வது வசனம் இஸ்லாம் உங்கள்' (பிதா) தந்தை இப்றாஹிமின் மார்க்கமாகும் என்கிறார். நம் மார்க்கத் தந்தை இப்றாஹிம் நபி இந்த இஸ்லாத்திற்கு தந்தது தான் என்ன?

இன்றைய இஸ்லாத்தில் அவருடைய பங்கு தான் என்ன? அல்லாஹ் முஹம்மது நபிக்கு இப்றாஹிமின் மார்க்கத்தை பின்பற்றுமாறு கூறுகிறார். அதாவது 16:123 ல் பின்ன ர் "நேர்மையாளரான இப்றாஹிமின் சன்மார்க்கத்தை நீர் பின்பற்ற வேண்டும். என்று நாம் உமக்கு வஹீ அறிவித்தோம். அவர் இணை வைப்போரில் ஒருவராக இருந்ததில்லை."முஹம்மத் நபி இப்றாஹிம் நபி மார்க்கத்தைப் பின்பற்றுகிறார். நாம் முஹம்மது நபியை பின்பற்றுகிறோம் என்றால் நாமும், முஹம்மது நபியும் இப்றாஹிம் நபியிடமிருந்து பெற்றது தான் என்ன ?

சற்று ஆழ்ந்து சிந்திப்பவர்கள் இறைவன் இம் மார்க்கத்தை நிலை நாட்டப்பட்ட மார்க்கம் என்று கூறுவதன் பொருளை விளங்கிக் கொள்ள முடியும். மார்க்கமும் அதன் வழிபாட்டு முறைகளும் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அதை (Verify) சரி பார்த்துக் கொள்ள வேதம் இருக்கிறது.

தேவையான அனைத்தையும் நம்பிக்கை யாளர்கள் இதற்குள்ளிருந்து பெற்றுக் கொண்டு இதன் வழியில் நடக்க வேண்டும். இதற்க்குள்ளேயே நம் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். மீறி வெளியில் சென்றாலும் தீராது என்பதே இஸ்லாமிய சமூகம் கண்டிருக்கும் சரித்திர உண்மை.

ஹஜ்ஜின் கிரியைகள் என்ன என்ற அவருடைய கேள்வியில் ஹஜ்ஜின் கிரியைகள் குர்ஆனில் கூறப்படவில்லை என்ற கருத்தே தொனிக்கிறது. இறைவனின் விவரிக்கப்பட்ட வேதத்தில் ஹஜ்ஜின் கிரியைகள் விரிவாகவே கூறப்பட்டிருக்கின்றன. இவர்களின் வீணான, அற்பக்கேள்விகளுக்கு எல்லாம் இறைவன் பதில் சொல்லவேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அல்குர்ஆன் - நம்பிக்கை கொண்ட வர்களின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தருகிறது. காரியங்களை விவரிக்கிறது. ஹஜ்ஜின் கிரியை பற்றிக் குர்ஆன் நிறையவே கூறுகிறது. இறைவன் நாடினால், அவற்றைத் தொடர்ந்து, அடுத்த இதழில் பார்ப்போம்.

(பதில்கள் தொடரும்)

## அத்தியாயம் 2: அல்பகறா (பசுங்கன்று) பின்குறிப்பு

2-1 இம்முத்திரை எழுத்துக்களின் இரகசியம் கடந்த 1400 வருடங்களாக இறைவனைால் பாதுகாக்கப்பட்டு வந்தது. இப்பொழுது இம்முத்திரை எழுத்துக்கள் குர்ஆனில், இறைவனால் அமைக்கப்பட்ட அற்புத, ரகசியக்கணிதக் குறியீட்டின் முக்கிய அங்கம் என்பதை நாம் அறிகிறோம். அலிஃப், லாம், மீம் என்பதன் அர்த்தம் 2வது வசனத்தில் குறிப்பிட்டுக் காண்பிக்கப்படுகிறது. இதில் தவறு ஏற்படும் என்ற சந்தேகமேயில்லை. இந்த அத்தியாயத்தில் இம்மூன்று எழுத்துகளும் இடம் பெறும் எண்ணிக்கை முறையே 4502, 3202, மற்றும் 2195. இவ்வெண்களின் கூட்டுத்தொகை 9899=19x 5 2 1 என்ற உண்மையிலிருந்து இவ்வேதம் தவறேயில்லாதது என்பது மறுக்க முடியாதவாறு நிரூபிக்கப்பபடுகிறது. இவ்விதமாக அரபி மொழியில் அதிகம் பயன்படுத்தப்படும் இம்மூன்று எழுத்துக்களும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் அற்புதமான கணித அமைப்பில் அக்கைப்பட்டிருக்கிறது. இதே முத்திரை எழுத்துக்கள் அத்தியாயம் 3, 29, 30, 31 மற்றும் 32 ஆகியவற்றிலும் காணப்படுகிறது. அவற்றிலும் இம்முத்திரை எழுத்துக்களின் கூட்டுத்தொகை 19ன் பெருக்குத் தொகையாகவே அமைக்கப்பட்டுள்ளது.

தொடரும்.....

# அல்குர்ஆன் ஐ வேற்றுமொழியில் மொழிபெயர்த்த முதல் அரபி

அகிலங்களின் இரட்சகரான இறைவனிடமிருந்து மனித குலத்திற்கு இறக்கப்பட்ட குர்ஆன் ஐ 1400 வருடங்களாக அரபி அல்லாத வேற்று நாட்டவரே மொழிபெயர்த்து வந்துள்ளனர். ஆனால் 1974 ஆம் ஆண்டு முதன் முதலாக அரபியை தாய் மொழியாகக் கொண்ட (எகிப்தில் பிறந்து வளர்ந்தவர்) Dr. **ரஷாத் கலீபா** அவர்கள், குர்ஆனை இறைவனின் நாட்டப்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதன் மூலம் உலகிற்கு குர் ஆனின் மிகச் சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு கிடைத்தது இன்ஷா அல்லாஹ் நம் இதழில் இந்த ஆங்கில மொழி பெயர்ப்பும் அதன்தமிழ் ஆக்கமும் தொடர்ந்து வெளிவரும்.

## வாசகர்கள் கவனத்திற்கு

அன்புள்ள வாசகர்களே, புதிய நினைவூட்டல் என்ற இந்த மாத இதழ் இலாப நோக்கின்றி இறை வழியில் மனிதர்களுக்கு, சேவை செய்வதற்காக மட்டுமே ஆரம்பித்து நடத்தப்படுகிறது. இதற்கு நீங்கள் சந்தா செலுத்தி வாங்கி பயனடையுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களின் பெயர்களுக்கும் சந்தா செலுத்தி பயனடையச் செய்யுங்கள்

## கேள்வி-பதில் பகுதி

அடுத்த இதழில் கேள்வி பதில் பகுதி தொடங்குகிறது. வாசகர்களின் கேள்விகளுக்கு அல்குர்-ஆனின் ஒளியில் பதில்கள் தரப்படும். இறைவனின் நாட்டப்படி.

**கேள்விகளும், விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.**

புதிய நினைவூட்டல் மாத இதழ்

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர் இறை
ஒரே செய்தி



SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662